Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 மாசி 24 சனிக்கிழமை (08.03.2014) பக்கங்கள் 20 ஓசை – 158

10



அன்றும் இன்றும்

17



பயனாளிகள் தெரிவு

## மூதூர் படுகொலை விவகாரம்; ஜெனிவாவில் நேற்று பிரஸ்தாபம்

மூதூரில் 2006 ஆம் ஆண்டு நடந்த பட்டினிக்கு எதிரான நடவடிக்கை என்ற தொண்டு நிறுவனத்தின் 17 பணியாளர்களின் கொலைச் சம்பவம் தொடர்பான தகவல்களை அரசாங்கம் வெளிச்சமிட்டுக் காட்ட வேண்டும் என பிரான்ஸ் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமை பேரவையின் 25 ஆவது கூட்டத் தொடரில் நேற்று அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்த பிரான்ஸ் பிரதிநிதி, இலங்கையின் தேசிய நல்லிணக்கச் செயற்பாடுகளில் தண்டனையில் இருந்து விலக்களிப்பதற்கு எதிரான போராட்டம் இன்றியமையாத ஒன்றாகும்.

தண்டனைகளில் இருந்து விலக்களிப்பதற்கு எதிரான போராட்டம் சகல இடங்களிலும் அவசியமானது. இலங்கையின் தேசிய நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு இது அவசியமானது. அதற்கு முன்னுரிமை உள்ளது.

இலங்கையின் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தவும் மனித

(19) ஆம் பக்கம் பார்க்க...

## இராணுவ சேவையில் தமிழ் யுவதிகள் இணைவு

இராணுவத்தின் மகளிர் படையணிக்கு வடமாகாணத்தைச் சேர்ந்த மேலும் 44 தமிழ் யுவதிகள் இணைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இணைக்கப்பட்ட யுவதிகளில் 20 பேர் முல்லைத்தீவு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், ஏனைய 24 பேரும் புதுக்குடியிருப்பைச் சேர்ந்தவர்கள் என இராணுவத்தினர் தெரிவித்தனர்.

## கூட்டமைப்பின் குழு விரைவில் டில்லிக்கு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு ஒன்று விரைவில் இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளது.

கடந்த புதன்கிழமை நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான விசேட சந்திப்பின் போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இந்தியா செல்லவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் குழு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்ட இராஜதந்திரிகளைச் சந்திக்கவுள்ளது.

# இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் வரவேற்கிறது அமெரிக்க செனட்



(வொஷிங்டன்)

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் நாட்டின் வடக்கிலும், கிழக்கிலும் ஜனநாயக மீள்உருவாக்கம் செய்யப்பட்டமைக்காகவும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட எல்லா வகையான எத்தனங்களுக்காகவும் அமெரிக்காவின் உயர் சபையான செனட் சபை பாராட்டுத் தெரிவித்துள்ளதுடன், மேற்படி யுத்தத்துக்குப் பிந்திய மீள் ஒப்புரவு நடவடிக்கைகளை வரவேற்றும் உள்ளது.

மேற்படி அமெரிக்க செனட் சபை தனது இல.364 என்ற பிரேரணை மூலமாக இந்த வரவேற்பைத் தெரிவித்துள்ளது.

அதேவேளை ஐக்கிய அமெரிக்க செனட் அறிமுகஞ் செய்த பிரேரணை 364 க்கு தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய நன்றி தெரிவித்து கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். உள்நாட்டு யுத்தத்தை 2009ஆம் ஆண்டு முடிவுக்கு கொண்டு வந்த பின்னர் நாட்டில் ஜனநாயகத்தை மீளளித்தல், புனர்நிர்மாணம் மற்றும் நல்லிணக்கம் போன்றவற்றில் இலங்கை அடைந்துள்ள வெற்றியை இனங்கண்டு இப்பிரேரணை அமைந்துள்ளது என அவர் தெரிவித்தார்

தூதுவர் செனட்டர்களுக்கு அனுப்பிய அக்கடிதத்தில், அந்த பிரேரணையானது அமெரிக்க மக்களின் சிரேஷ்ட அமெரிக்க பிரதிநிதிகள் இலங்கை பற்றி கொண்டுள்ள நல்லபிப்பிராயத்தையும், புரிந்துணர்வையும் எடுத்துக்காட்டுகிறது. நாட்டில் தொடர்ச்சியாக நிலவும் சமாதானம், ஜனநாயக மீளளிப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கான திடமான நடவடிக்கைகள் யாவும் இலங்கையின் உண்மை நிலையை எடுத்துக்காட்டுவதாக அந்தப் பிரேரணையில் சுட்டிக்காட்டியுள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயம் என அவர் தெரிவித்தார்.

இந்தப் பிரேரணையானது மிகவும் சமநிலைப்படுத்தப்பட்டதும், நீதியானதுமாகும். இலங்கை அரசாங்கத்தினால் மேற்

(19) ஆம் பக்கம் பார்க்க...

## புலிகள் மீதான தடையை நீடித்தது அமெரிக்கா

அமெரிக்காவில் தடை செய்யப்பட்டுள்ள தீவிரவாதிகள் அமைப்பின் பெயர்ப் பட்டியல் வெளியாகியுள்ளது.

அதன்படி, விடுதலைப் புலிகள் அமைப்பை அமெரிக்கா மீண்டும் தடை செய்யப்பட்ட தீவிரவாத அமைப்புக்களின் பட்டியலில் சேர்த்துள்ளது.

உலகில் உள்ள 60 தீவிரவாத அமைப்புகளை அமெரிக்கா 2014 ஆம் ஆண்டில் தடை செய்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பு 1997 ஒக்ரோபர் 8 ஆம் திகதி முதல் முதலில் அமெரிக்காவில் தடை செய்யப்பட்டது.

அன்று தொடக்கம் ஒவ்வொரு வருடமும் புலிகள் அமைப்பு அமெரிக்காவில் தடை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சிவில் பாதுகாப்புக் குழுக்களை பலப்படுத்த நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் செயற்படும் சிவில் பாதுகாப்புக் குழுக்களைப் பலப்படுத்தும் கலந்துரையாடல் ஒன்று நேற்று இலங்கை வேந்தன் கலையகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர கலந்து கொண்டதுடன், யாழ்.மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரோஷான் டயஸ், யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் மற்றும் பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்கள், இராணுவ அதிகாரிகள், சமயத் தலைவர்கள், சிவில் பாதுகாப்புக் குழுக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

தற்போது இயங்கி வருகின்ற சிவில் பாதுகாப்புக் குழுக்களின் செயற்பாடுகளை மேலும் பலப்படுத்தும் வகையில் அவற்றை

(19) ஆம் பக்கம் பார்க்க...

## கைதடியில் கோர விபத்து; மயிரிழையில் தப்பினர் மாணவர்கள்

### மூவர் படுகாயம்

(கைதடி)

தென்னிலங்கையிலிருந்து பாடசாலை மாணவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளை ஏற்றி வந்த தங்காலை டிப்போவைச் சேர்ந்த பஸ் ஒன்றும், டிப்பர் ஒன்றும் கைதடிப் பிள்ளையார் கோயிலடிப் பகுதியில் நேற்று மாலை 5.00 மணியளவில் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் டிப்பரின் சாரதியும், பஸ்ஸில் வந்த மாணவியர் சிலரும் காயமடைந்தனர்.

காயமடைந்த டிப்பர் சாரதியான தாவடி கொக்குவிலைச் சேர்ந்த செல்வராஜா சிவப்பிரியன் (வயது-26) என்பவரும், தங்காலையைச் சேர்ந்த நாவின்ன கஜனி (வயது-15) என்ற மாணவியும் அதே இடத்தைச் சேர்ந்த ஐ.டபிள்யு.ஏ.கவிந்து (வயது-15) என்பவரும் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.



(இ)

## மனித உரிமை அதிகாரிகள் நாளை ஜெனிவா பயணம்

பொதுநலவாய நாடுகளின் அழைப்பையேற்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினர் நாளை ஜெனிவா பயணமாகவுள்ளனர்.

மனித உரிமை ஆணைக்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சிப் பட்டறையொன்று 9 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது. பொதுநலவாய நாடுகளிலிருந்து இப்பட்டறைக்கு பங்குபற்றுநர்கள் வருகை தரவுள்ளனர்.

இலங்கையிலிருந்து செல்லும் குழுவினர் ஜெனிவாவில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கலந்து கொள்வார்கள்.

மனித உரிமை ஆணைக்குழு தவிசாளர் பிரியந்த பெரேரா தலைமையிலான குழுவில் 10 பிரதிநிதிகள் இடம்பெறுகின்றனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க...

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்தி சங்க 53 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் நாளை இடம் பெறவுள்ளது.

காலை 10 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவ சிகிச்சைப் பகுதியில் நடைபெறும் எனவும் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (இ)

# வருடாந்த மகோற்சவம்

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று காலை 8 மணிக்கு கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி எதிர்வரும் 16 ஆம் திகதி தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது.

# மெய்வல்லுநர் போட்டிகள்

(வேலணை)

வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டி இன்றைய தினம் 8 திகதி பிற்பகல் 2 மணியவில் வித்தியாலய அதிபர் ந.பஞ்சலிங்கம் தலைமையில் வித்தியாலய விளையாட்டு மைத்தானத்தில் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில் பிரத விருந்தினராக தீவக கல்வி வலயப் பணிப்பாளர் தி.ஜேன் குயின்ரஸ் கலந்து கொள்கின்றார். சிறப்பு விருந்தினர்களாக வேலணை பிரதேச சபையின் தலைவர் சி.சிவராசா (போல்) ஆ.அருமைநாயகம் (முன்னாள் சரஸ்வதி வித்தியாலய அதிபர்) ஆகியோர்கள் கலந்து கொள்கின்றனர். (05)

---

(வேலணை)

புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுர் திறனாய்வுப் போட்டி இன்று 12 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் பாடசாலை அதிபர் அதிபர் சொ.பகீதரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக தீவக கல்வி வலயப்பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரன்ஸ் கலந்து கொள்கின்றார். (05)

# மகளிர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

கரிகண்ணனின் சர்வதேச மகளிர் தினம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள கரிகணன் தனியார் நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

செல்வி கு.ஜெசி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். உதவி தொழில் ஆணையாளர் திருமதி நீலலோஜினி ஜெகதீஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த மகளிர் தின விழாவில் நெடுந்தீவு முகிலனின் 'வேடம் தாங்கி' என்னும் தலைப்பில் 8 ஆவது குறும்பட இறுவட்டு வெளியீடும், காட்சிப் படுத்தலும் இடம்பெறும்.


## சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

தனி ஒரு பெரிய குடும்பத்திற்கு பாவிக்கக்கூடிய அல்லது அக்கட்டடத்தை இரு சிறு வீடுகளாக்கக்கூடிய கட்டமொன்று சுதுமலை தெற்கில் விற்பனைக் குண்டு.

தொடர்பு: கே.சீவறட்ணம் சிவராசா, சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு (ஏகாம்பரம் கடையடி).

(R/342)





## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..........................................

முகவரி :- ..........................................

பிறந்த ஆண்டு :- ..........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..........................

# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1040 | திகதி 06.03.2014

வெற்றி எண்கள்: 24 27 41 58 | ஆங்கில எழுத்து: N

**ஜக்பொட் பரிசு ரூ. 2,37,03,180/= வெல்லப்படவில்லை**

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 2,37,03,180/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 16 | 50,000/= | ரூ. 8,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 247 | 1,000/= | ரூ. 2,47,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 453 | 1,000/= | ரூ. 4,53,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11717 | 60/= | ரூ. 7,03,020/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6197 | 40/= | ரூ. 2,47,880/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 153094 | 20/= | ரூ. 30,61,880/= |
| ஆங்கில எழுத்து | 22162 | 20/= | ரூ. 4,43,240/= |
| | | மொத்தம் ரூ. | 69,56,020/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 விதம் பணப்பரிசுகளை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| மன்னார் | 705846645-5-05 |
| குருநாகல் | 705842420-7-07 |
| மாத்தளை | 705852783-5-45 |
| மாத்தறை | 705845919-3-33 |
| காலி | 705849914-3-03 |
| கேகாலை | 705840665-9-29 |
| கண்டி | 705844255-6-46 |
| கம்பஹா | 705852865-8-28 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 73,56,020/=

**எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 24,002,580/=**

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.03.10 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: 2 335467

(C/3357)

# நாடக ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப் பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டத் தொடரின் இரண்டாவது நிகழ்வாக 'மொழியாக உடல்' என்னும் தொனிப் பொருளில் பந்து மனம்பெரி என்ற ஆற்றுகை ஒன்றை நிகழ்த்திக்காட்டவுள்ளனர்.

நாளை காலை 10 மணி தொடக்கம் 12 மணி வரை சமகாலக் கலை கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக்காப்பகம் 199, கோவில் வீதி, நல்லூரில் இந்நிகழ்வு இடம் பெறவுள்ளது.

## St.JOHN'S COLLEGE, JAFFNA.
## CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA.
### THE JAFFNA CADEMY AND SCHOOL OF TECHNOLOGY

**ADMISSION - 2015 FOR GRADE 1, GRADE 4, GRADE 6, GRADE 10 & A/L**

**தரம் 01, தரம் 04, தரம் 06, தரம் 10 இற்கான அனுமதி - 2015**

01. அ.விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 03.03.2014 முதல் 17.03.2014 வரை பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 25.03.2014 வெள்ளிக்கிழமை. அத்திகதிக்குப் பின்னர் எமக்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.

02. தரம் 01 இற்கான விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரட் கொப்பி) இணைக்கப்படவேண்டும்.

03. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

04. ஒரு படிவத்திற்கானதும், பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 1000/=

5. வயதெல்லைகள்:

அ.தரம் 1 விண்ணப்பத்தாரி 01.02.2009 இற்கும் 31.01.2010 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.

ஆ. தரம் 04 விண்ணப்பத்தாரி 01.02.2006 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

இ. தரம் 06 விண்ணப்பத்தாரி 01.02.2004 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருந்தல் வேண்டும்.

ஈ. தரம் 10 விண்ணப்பத்தாரி 01.02.2000 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

06. தரம் 12 (A/L - 2017 Batch) விண்ணப்பத்தாரி 01.02.1998 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.

07. தரம் 4, தரம் 6, தரம் 10 இற்கான பிரவேசப் பரீட்சை 11.10.2014 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும்.

குறிப்பு

01. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அனுமதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப்பரிசில்கள், கல்லூரியால் வழங்கப்படும்.

02. தரம் 12 இற்கு (A/L - 2017 Batch) தமிழ் மொழி மூலம் (தொழில் நுட்பத்துறை, விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்), ஆங்கில மொழி மூலம் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்) London A/L 2015/2016 இற்கும் கற்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் சென்.ஜோண்ஸ் கல்லூரியினால் ஏற்றுக்கொள்ளப்படும். அனுமதிப் பரீட்சை 03.01.2015 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். புதிய வகுப்புக்கள் 07.01.2015 ஆரம்பமாகும்.

03. சுண்டிக்குளி மகளிர் கல்லூயில் தரம் 12 (A/L) (தமிழ்/ஆங்கில மொழி மூலம் 2017 Butch) விண்ணப்பதாரிகள் O/L பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.

04. The Jaffna Academy and School of Technology இல் Gr.05, மற்றும் 2 ஆம் தடவையாக O/L, A/L எடுக்கும் மாணவர்களினதும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

அதிபர்கள். (C/3364)

# 65 தீவக கல்விவலய ஆசிரியர்கள்

# யாழ்.மாவட்டத்துக்கு மாற்றம்

## கல்வி வலயம் தகவல்

(வேலணை)

தீவக கல்வி வலய பாடசாலைகளில் கடந்த ஏழு வருடங்களாக கடமையாற்றி வந்த 65 ஆசிரியர்களையும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மாவட்டத்தில் உள்ள தாங்கள் விண்ணப்பித்த கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக தீவக கல்வி வலயம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு இடமாற்றம் செய்யப்படவுள்ள ஆசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சியினைப் பெற்றுள்ள தீவகத்தைச் சேர்ந்த பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் நியமனம் பெற்று வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக தீவ்ககல்வி வலயம் தெரிவித்துள்ளது. (05)

# முத்தையன்கட்டு கரைப்பகுதியை இராணுவம் ஒப்படைக்க வேண்டும்

## வடமாகாண விவசாய அமைச்சர் கோரிக்கை

போருக்குப் பிறகு முத்தையன்கட்டில் வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான 65 ஏக்கர் பரப்பளவுள்ள அலுவலக வளாகத்தை இராணுவம் கைப்பற்றி வைத்திருக்கிறது. முத்தையன்கட்டின் விவசாய அபிவிருத்திக்கு இராணுவம் இடையூறாக உள்ளது என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் முத்தையன்கட்டில் தட்டையன் மலைப்பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கில் வயல் விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு, முத்தையன்கட்டுக்குளம் இலங்கையின் பிரசித்தி பெற்ற நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றாகவும், முல்லைத்தீவு மாவட்டத்தின் இரண்டாவது பெரிய குளமாகவும் உள்ளது. 1965 காலப் பகுதியில் இந்தக் குளத்தை நம்பி வடக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமானவர்கள் இங்கு குடியேற்றப்பட்டார்கள். வறுமையோடு குடியேறியவர்கள் முத்தையன் கட்டுக் குளத்தில் ஏற்று நீர்ப்பாசனத்தின் கீழ் உப உணவுச் செய்கையில் ஈடுபட்டு விரைவிலேயே பொருளாதார ரீதியாக மேம்பாடு அடைந்தார்கள். ஆனால், நடந்து முடிந்த போர் முத்தையன்கட்டு விவசாயிகளை வறுமையின் குழிக்குள் தள்ளி விட்டிருக்கிறது.

போர் முடிந்து ஐந்து ஆண்டுகளை எட்டியுள்ள நிலையிலும் விவசாயிகளின் பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை. எமது விவசாயிகளை ஊக்கப்படுத்தும் நோக்கில், பொருத்தமான நல்லினப் பயிர்களை அறிமுகம் செய்து அவர்களது வயல் நிலங்களுக்கே சென்று வயல் விழாவைக் கொண்டாடி வருகிறோம்.

குளத்தில் நீர் தேங்கினால்தான் கிணறுகளிலும் நீர்மட்டம் உயரும். நீண்ட காலமாகப் பழுதுபார்க்கப்படாமல் இருக்கும் முத்தையன்கட்டுக் குளத்தைப் புனரமைத்து அதிக நீரைத் தேக்குவது அவசியம். இதற்குத் தடையாக இராமல், குளக்கரையிலுள்ள படையினர் அவற்றை எங்களிடம் மீள ஒப்படைக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். முல்லைத்தீவு மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரனின் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்ச்சியில் வடமாகாண சபை உறுப்பினர்கள் வீகனகசுந்தரசுவாமி, துரவிகரன், மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், முல்லைத்தீவு மாவட்டப் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் ந.சிறிஸ்கந்தராசா ஆகியோரும் கலந்து கொண்டனர். (48)

# அபிவிருத்திக்குழு பொதுக்கூட்டம்


(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட 1ஆம் வட்டாரத்துக்கான அபிவிருத்திக்குழு அமைப்பதற்கான பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மீசாலை மேற்கு மலைமகள் சனசமூக நிலைய மண்டபத்தில் வடமாகாணசபை உறுப்பினர் கேசவன் சயந்தன் தலைமையில் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளரும் சாவகச்சேரி நகரசபை உறுப்பினருமான அ.பாலமயூரன் அறிவித்துள்ளார். அப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கம், விவசாய சம்மேளனம் மாதர்சங்கம் விளையாட்டுக் கழகங்கள், சனசமூகநிலையங்கள் ஆலய திருப்பணிச் சபைகள் மற்றும் உற்பத்தி விவசாய கைத்தொழிலில் தொடர்புடைய அமைப்புக்களுடன் இணைந்து, இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இதன்மூலம் குறித்த வட்டாரத்தின் தேவைகள் குறைபாடுகள் இனங்காணப்பட்டு அரங்கேறும் வகையில் அபிவிருத்தித் திட்டங்கள் வகுக்கப்பட்டு வடமாகாணசபை ஊடாக நிதிக் கொடை அளிக்கக்கூடிய முகவர் நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

வடமாகாண சபைக்கு கிடைக்கும் வெளிநாட்டு நிதிகளில், இருந்து அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தல்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடமாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோரின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி மூலம் எல்லாப் பிரதேசங்களுக்கும் பரவலாக கிடைக்கும் வகையில் முன்மொழிவுகளை செய்தல். கடந்த கால யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களின் காரணமாக பொருளாதார நிலையில் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை வகுப்பதற்கு பயனாளிகளை, இனங்காணுதல். விசேட உதவி தேவைப்படும் மற்றும் நலிவடைந்தோர் தொடர்பில் திட்டங்களை வரைதல் மற்றும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் தொடர்பான விடயங்கள் ஆராயப்படவுள்ளன. (11)



யாழ். அரியாலை செம்மணி வயல் வெளிகளில் அடர்ந்து வளர்ந்து காணப்பட்ட 'சம்பு' புற்கள் எரிக்கப் படுவதால் அயலில் உள்ள பகுதிகள் எங்கும் புகை மண்டலமாக காட்சியளிப் பதனைக் காணலாம். (51)

# ஏமாறுகிறவர்களே பேதைகளாகவும் முட்டாள்களாகவும் இருக்கிறார்கள்...




சந்தையில், கடையில், சலூனில், பள்ளிக்கூடத்தில், ஆஸ்பத்திரியில், பஸ்ஸில், தெருக்கரை நிழலில், தொலைபேசிகளில், பத்திரிகைகளில், நாலுபேர் கூடி வேலை செய்கிற இடங்களில் எல்லோரும் அழுது வடியும் முகத்துடன் ஜெனிவாத் தீர்மானத்தைப் பற்றி சோகமாகக் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள் பெரும்பாலான தமிழர்கள்.

உலகம் மீண்டும் ஏமாற்றிப் போட்டுது என்ட கவலை எல்லோரையும் வாட்டிப் போட்டுது.

உண்மையில் இவர்கள் எல்லோரும் நினைப்பதைப்போல உலகம் தமிழர்களையும் நீதியையும் ஏமாற்றியிருக்கிறதா? அல்லது தமிழர்கள் அப்படி நினைத்துக் கொண்டிருக்கிறார்களா?

நான் சொல்வேன், தமிழர்கள்தான் அப்படி அதிகமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று.

இதுதான் தமிழர்களின் பெரிய குறைபாடே. எப்பொழுதும் தங்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பதும், உலகமெல்லாம் தமிழர்களைப் பற்றியே – தமிழர்களுக்காகவே சிந்தித்துக்கொண்டிருக்கிறது என்ற மாதிரியும் நினைத்துக்கொண்டிருப்பதும்.

ஆனால், உலகம் தன்னைப் பற்றியே சிந்திக்கிறது. ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு இனமும் ஒவ்வொரு சமூகமும் ஒவ்வொரு மனிதரும் தனக்காகவும் தன்னைப்பற்றியுமே சிந்தித்துக்கொண்டிருக்கிறது.

இதற்குள் சில பொதுமைப்பாடுகள் உண்டு.

தேவைப்படும்போது அந்த அடிப்படையில் ஒவ்வொன்றும் இணைந்து கொள்கின்றன. அது தேவை சார்ந்தும் உணர்வு சார்ந்தும் அமைகிறது. இதில் முதன்மை அடைவது, தேவைசார்ந்த இணைவுகளே. அதிலும் பொருளாதார நலன் சார்ந்த இணைவுகளே.

உலகம் என்பது இப்படித்தான் உள்ளது.

இப்பொழுது இலங்கையை அமெரிக்கா அதிகமான நெருக்கடிக்குள் தள்ளாமல் விட்டதும் இந்தத் தேவை சார்ந்த காரணத்தினால்தான்.

இதைத் தமிழர்கள் இன்னும் விளங்கிக் கொள்ளவில்லை.

இதுதான் சோகமே தவிர, ஜெனிவா தமிழர்களைக் கைவிட்டதற்காக சோகமாயிருக்க வேண்டியதில்லை.

ஏனென்றால் ஜெனிவா மட்டுமல்ல எந்தத் தரப்பும் தமிழர்களை கையேற்கவும் கையிற் தூக்கவும் இல்லை. அப்படிக் கை தூக்கி விட்டவர்கள் இப்பொழுது கையை விட்டிருந்தால் அதற்காக நாங்கள் கவலைப்படலாம்.

உண்மையில் நடந்தது என்னவென்றால், எப்போதையும்போலத் தமிழர்கள் ஏமாளித்தனமாக மற்றவர்களை–ஜெனிவாத் தீர்மானத்தையும் அமெரிக்க அறிக்கையையும் நம்பியிருந்ததே.

எத்தனை தடவை கையைச் சுட்டுக்கொண்டாலும் அதிலிருந்து எந்தச் சிறிய பாடத்தையும் படித்துக்கொள்ளாத ஒரு மக்கள் கூட்டம் என்றால் அது இந்தத் தமிழ்ப்பெருங்குடிதான்.

பூனைகூட ஒரு தடவை சூடுபட்டால் மறுபடியும் அடுப்பங்கரையை நாடாது.

ஆனால், தமிழர்கள் தங்களின் தலையைச் சுட்டெரித்துக் கொண்டாலும் அதிலிருந்து ஒரு சிறு அறிவை–அனுபவத்தைக் கூடப் பெற்றுக்கொள்ளாதவர்கள்.

இதற்கு முழுக்காரணமும் தமிழர்கள் தங்களுடைய தலைமைகளாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் தலைவர்களும் அவர்கள் விரும்பும் ஊடகங்களுமே.

இந்தத் தலைவர்களும் இந்த ஊடகங்களும் தமிழர்களை எத்தனை தடவை ஏமாற்றியிருக்கின்றன. எத்தனை தடவை பெரிய துரோகத்தையெல்லாம் இழைத்திருக்கின்றன.

இந்தத் தலைவர்களும் இந்த ஊடகங்களும் தமிழ் மக்களை ஏமாற்றியதையும் ஏமாற்றிக் கொண்டிருப்பதையும் விட ஜெனிவாத் தீர்மானமும் அமெரிக்க அறிக்கையும் உலகமும் கூடுதலாக ஒன்றும் ஏமாற்றி விடவில்லை.

அமெரிக்கா தன்னுடைய நலன்சார்ந்தே எப்போதும் சிந்திக்கும். அதை விட்டு அது உலக நீதிக்காக என்றும் சிந்தித்ததாக நான் அறிந்ததில்லை.

இந்தியா கூட அப்படித்தான் முன்னரும் சிந்தித்தது. செயற்பட்டது. இப்பொழுதும் அப்படித்தான்.

அதிகம் ஏன், தமிழகத்திலிருந்து அரசியல் குரலை எழுப்பும் ஜெயலலிதாவும் சரி, கருணாநிதியும் சரி, சீமான், வை.கோவும் சரி, பாரதிய ஜனதாக் கட்சியும் சரி எல்லாத்தரப்புமே தங்கள் தங்கள் ஆதாயங்களுக்காகவே செயற்படுகின்றன.

தங்கள் நலன் சார்ந்தே உலகம் முழுக்க நீலிக்கண்ணீரும் போலிக்கண்ணீரும் வழக்கப்படுகிறது.

இதில் பேதைகளாகவும் மூடர்களாகவும் மடையர்களாகவும் முட்டாள்களாகவும் நாங்களே இருக்கிறோம்.

இதையெல்லாம் சொன்னால், உலகம் இப்படித்தானிருக்கிறது. அதை எப்படி விளங்கிக்கொள்ள வேணும் என்று யாராவது சொல்ல முயன்றால், அவர்களை துரோகிப் பட்டியலில் தூக்கிப் போட்டு விட்டு திரும்பத்திரும்ப முட்டாள் வேலைகளில் இறங்கி விடுகிறார்கள் பெரும்பாலான தமிழர்கள்.

இதிலே கொஞ்சம் படித்த – அபிப்பிராயத்தை உருவாக்க வல்லவர்கள் தாங்கள் என்று நினைக்கும் தமிழர்கள்தான் படு மோசம்.

அவர்களைச் சுட்டெரிக்கும் வரை, அவர்களுடைய இந்தப் பேய்த்தனமான கற்பனையை – கற்பனைப்பேயைச் சுட்டெரிக்கும்வரை தமிழர்களின் பேய்த்தனம் மாறாது. மாறவே மாறாது.

சந்தர்ப்பங்கள் நிறையப் பேரைக் கூப்பிடுகின்றன. ஆனால் சிலர்தான் எழுந்து நிற்கிறார்கள்.

- ஆலிவர் வோர் போர்ட்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## நம் மனதில் சமநீதி உண்டா?

இன்று உலக மகளிர் தினம். இப்போதும் இது ஆண்களின் உலகமாகத்தான் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. பெண்ணைத் தாயாக, தேவதையாக, சக்தியாக, தெய்வமாகப் போற்றுவதாகச் சொல்வதை விட்டுவிட்டு, சகமனுசியாக ஏற்றுக் கொண்டிருக்கிறோமா என்பதை ஆண்கள் ஒவ்வொருவரும் மனப்பூர்வமாகக் கேட்டுப் பார்த்துக் கொண்டால் உண்மை விளங்கும்.

தனது தாயை, சகோதரியை, மனைவியை நேசிக்கவோ, புரிந்துகொள்ளவோ முடியாத ஒருவனால் பெண் விடுதலை அல்லது சமத்துவம் – அவன் என்னதான் முற்போக்கைச் சொல்லிப் போராடினாலும், ஆயிரமாயிரம் பெண்களைக் 'கரையேற்றினாலும்' – சாத்தியப்படக்கூடுமாவென்பது சந்தேகமே.

எந்தப் பூச்சுற்றும் வார்த்தைகளாலும் பெண்ணைச் சமுதாயத்தின் இரண்டாம் நிலையிலேயே வைத்திருக்கும் உண்மையை ஒளித்துவிட முடியாது. இந்த நாட்டில் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப்படுகிறோம் என்று போராடிய தமிழ்ச் சமூகத்தின் உள்ளேயே, சாதிரீதியாகவும் பால்ரீதியாகவும் இரண்டாம் மூன்றாம் தரமாகப் பலர் நடத்தப்பட்டு வருவது பற்றி நமக்கு எந்தக் கூச்சமும் உண்டாவதில்லை.

பல இழிவுகளை நாம் மூடி மறைத்து இவ்வாறு நிகழவில்லை என்று ஒரு போலி வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமது சமூகத்தில் பெண்களின் நிலைமை இதுவே. சமுதாயத்தில் இந்த அநீதி நடப்பதை உணர்ந்தும், அலட்சியப்படுத்தியபடியோ அல்லது பெரும்பாலும் நியாயப்படுத்தியபடியோ, அதை ஏற்றுக்கொள்ளாது செல்லும் மனப்போக்கே நமது பொது மனப்போக்காக உள்ளது.

பெண்ணை தனக்குச் சமமானவள் இல்லை என தீர்மானமாக ஆண் கருதியதால், அவனால் எப்படி நியாயப்படுத்தப்பட்டிருப்பினும், அவை ஆண்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு ஆண்களால் ஒப்பிக்கப்பட்டவை என்பதே உண்மை.

பெண்ணின் இந்த நிலைமை குறித்து, பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான பூலென் தெ லா பார் (Poulain de la Barre) என்ற பிரெஞ்சுப் பெண்மணி சொன்னார்: "பெண்களைக் குறித்து ஆண்கள் வழங்கிய தீர்ப்புகள் அனைத்துமே நம்பகத் தன்மை அற்றவை. ஏனெனில் அங்கே நீதிபதி வழக்கறிஞர்கள், வாதி, பிரதிவாதிகள், சாட்சிகள் அனைவருமே ஆண்கள்."

உண்மையில், தொன்று தொட்டே பெண்களுக்காகச் சிந்திப்பதும், அவர்களுக்கான நியதிகளை வழங்குவதும் ஆண்களாகவே இருந்து வந்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. தமிழர் சமூகத்திலும் சங்க காலந்தொட்டு ஆணுக்கும் பெண்ணுக்கும் சொல்லப்பட்ட அறங்கள் பாலியல் அடிப்படையில் எழுந்தவை பாரபட்சமானவை, இன்றைய நவீனத்துவ நோக்கில் பெண்ணுக்குப் பெரும் அநீதி இழைத்தவை என்பதில் சந்தேகமில்லை.

ஆக, மானுடம் என்பது ஆணுக்கானது. ஆணை விலக்கிவிட்டு பெண்ணில்லையென்பதும், அவள் பிறர்சார்ந்தே இயங்கப் பிறந்தவளென்றும் சொல்லி வந்திருக்கிறார்கள். இதுவே நம் சிந்தையில் ஊறி, மனிதர்கள் சமமாகப் படைக்கப்படவில்லை என்பதையே ஏதோ ஒருவகையில் நாமெல்லோரும் நியாயப்படுத்திக் கொண்டிருப்பதாக இருக்கிறது.

இன்றைக்கு மெல்ல மெல்ல பௌதீக ரீதியாக பெண்நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகிறதென்பது உண்மையானாலும், சிந்தனை இன்னும் மாறிவிடவில்லை. வருங்கால உலகம் ஆண்களுக்கு மட்டுமல்ல. பெண்களுக்கும் உரியது என்கிற நிலை வருமா? அப்படி வராமல், நாம் மனதில் சமநீதி கொண்ட மனிதர்கள் எனச் சொல்லிக்கொள்ள முடியாது.

- ஆசிரியர்.

# இரு மொழிகளில் தேசிய கீதம்
# வலியுறுத்துகிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

தேசிய கீதம் இரண்டு மொழிகளிலும் இசைக்கப்பட வேண்டுமென ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் தேசிய கீதம் இசைக்கப்படுவதனை ஏற்றுக்கொள்கின்றோம்.

தோட்டப் பகுதிகளில் கூட தேசிய கீதம் தமிழ் மொழியில் இசைக்கப்படுகின்றது.

தேசிய கீதத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு பாடப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனவே ஏன் புதிய பிரச்சினைகள் உருவாக்கப்பட வேண்டும்.

தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்படுகின்றது. அது தொடர்பில் ஏன் சர்ச்சைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

புரியாத மொழியில் தேசிய கீதத்தை இசைப்பதனால் உணர்வு ஏற்படாது என அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேசிய கீதம் சிங்கள மொழியில் மட்டுமே இசைக்க வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது. வேறு மொழிகளில் தேசிய கீதம் இசைப்பது அரசியல் அமைப்பினை மீறும் செயலாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பொலிஸ் ஊடகப் பேச்சாளரை பதவி விலக்கக் கோரிக்கை

(கொழும்பு)

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹனவை அந்தப் பதவியில் இருந்து உடனடியாக நீக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

நீதியான தேர்தலை நடத்துவதற்காக தேர்தல்கள் ஆணையாளர் இந்தத் தீர்மானத்தை எடுக்க வேண்டும் என அந்தக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சில சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் முன்னர் அரசாங்கத்திற்கு சார்பாகவும் சம்பவம் தொடர்பான விடயத்தை வேறு பக்கம் திசை திருப்பும் நோக்கிலும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

வலஸ்முல்ல பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக பணியாற்றிய காலத்தில் ஒருவரை கொடூரமான சித்திரவதை செய்தமை தொடர்பில் அஜித் ரோஹன நீதிமன்றத்தில் குற்றவாளியாக இனங்காணப்பட்டவர்.

இப்படியான நபர் சட்டத்தரணியாகவும் பொலிஸ திணைக்களத்தின் உயர் பதவிக்கும் வந்தது கேள்விக்குறியானது.

அஜித் ரோஹனவின் செயற்பாடுகள் பொலிஸ் திணைக்களத்தின் நற்பெயருக்கு பெரும் இழுக்கை ஏற்படுத்தியுள்ளது எனவும் ஐக்கிய தேசியக் கட்[illegible] தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் ஆராய்ந்த பின்னர் எதிர்காலத்தில் பதிலளிக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# மிஹின் லங்கா நிறுவனத்திற்கு 2 வருடங்களில் 329 கோடி நட்டம்

(கொழும்பு)

மிஹின் லங்கா விமான சேவை நிறுவனம் கடந்த இரண்டு வருடங்களில் 329 கோடி ரூபா நட்டத்தை எதிர்நோக்கியது என சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

2012 ஆம் மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் இந்த விமான நிறுவனம் 329 கோடியே 34 இலட்சத்து 74 ஆயிரம் ரூபா இழப்பை சந்தித்துள்ளது. அத்துடன் 2011 ஆம் மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் 196 கோடியே 78 இலட்சம் ரூபா இழப்பை சந்தித்தது.

மிஹின் லங்கா நிறுவனத்தில் ஊழியர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதுடன் தற்போது சேவையாற்றும் ஒரு ஊழியருக்காக மாதாந்தம் ஒரு லட்சத்து 29 ஆயிரத்து 649 ரூபா செலவிடப்படுகிறது. இதனைத் தவிர மிஹின் லங்கா நிறுவனம் நீண்டகால மற்றும் குறுகிய கால அடிப்படையில் 283 கோடி ரூபா கடனைப் பெற்றுள்ளது எனவும் அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ர[illegible] கருணநாயக்கவின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

# தொழில் சந்தைக்கு பொருந்தும் வெளிவாரி பட்டப்படிப்பு
## உயர் கல்வி அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

தொழில் சந்தைக்குப் பொருந்தக்கூடிய வகையில் வெளிவாரி பட்டப்படிப்புகளை உருவாக்குவதற்கு உயர்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பரீட்சைகள் திணைக்களம் மற்றும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றுடன் கூட்டிணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன குறிப்பிட்டார்.

புதிய தொழில்நுட்பம் மற்றும் தகைமைகளுடன் கூடிய பட்டதாரிகளை உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். இந்த வெளிவாரி பட்டப்படிப்புகளுக்கான பரீட்சைகளை பிரத்தியேக நிலையமொன்றின் ஊடாக நடத்துவதற்கும் கவனம் செலுத்தப்பட்டிருப்பதாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# சிக்கியது ஹெரோயின்

பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட 36 கிலோ கிராம் ஹெரோயின் சுங்கத் திணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஊருகொடவத்தைப் பகுதியில் வைத்து கொள்கலன் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் இலங்கையில் உள்ள பாகிஸ்தானியர் ஒருவரின் முகவரிக்கு இந்த ஹெரோயின் அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை ஆரம்பக் கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## வர்த்தக நிலைய உரிமையாளரை தாக்கிய இளைஞர் கைது

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணீரூற்று பிரதேசத்திலுள்ள அழகுசாதன பொருட்கள் விற்பனை நிலையமொன்றின் உரிமையாளரை தாக்கியதாகக் கூறப்படும் அப்பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை நேற்றுமுன்தினம் கைது செய்ததாக முள்ளியவளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையத்தில் பணியாற்றும் இவ்விளைஞர் மதுபோதையில் தாக்குதலுக்குள்ளானவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு அவரைத் தாக்கியதுடன், அழகுசாதனப் பொருட்கள் விற்பனை நிலையத்திலுள்ள பொருட்களையும் சேதப்படுத்தியதாகவும் பொலிஸார் கூறினர். தாக்குதலுக்குள்ளானவர் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

சந்தேக நபரிடம் பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் உயர்கல்வி தொடர்பான ஒத்திவைப்புப் பிரேரணைமீது ஆற்றிய உரை



# மூன்றாம் உலக நாடுகளின் மூலதனமாக கல்வியே இருந்திருக்கிறது

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே,

கல்வி என்பது அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டுமென்பதை நான் இங்கு வலியுறுத்திப் பேச விரும்புகின்றேன். ஏனென்றால், கல்வியில் அரசியல் புகுந்தால் அல்லது கல்விக் கொள்கைத்திட்டங்களில் அரசியல் செயற்பாடுகளுக்கு - கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டால் அந்தக் கல்வி பாழடைந்துவிடும். இதை நாங்கள் வரலாற்று ரீதியாக அனுபவித்திருக்கின்றோம் என்ற வகையில் கல்வியில் அரசியல் செல்வாக்கு செலுத்தப்படக்கூடாது என்பதை நான் இங்கு மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

அரசியல்வாதிகள், அறிவார்ந்த சமூகத்தினர் எல்லோரும் இணைந்து இந்த நாட்டுக்கு ஏற்புடைய, இந்த நாட்டின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தக்கூடிய கொள்கைத் திட்டமொன்றை வகுப்பது தான் இந்த நாட்டுக்கு உகந்ததாக இருக்க முடியுமென்பது எனது கருத்தாகும். கல்வி அபிவிருத்திக்காக-மேம்பாட்டுக்காக எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பொதுவான கொள்கைத் திட்டத்தை வகுத்து அதை ஆரம்பக் கல்வியிலிருந்து உயர்கல்விவரை செயற்படுத்தும்போது இந்த நாட்டில் அறிவார்ந்த சமூகத்தை உருவாக்க முடியுமென்று நான் நம்புகின்றேன்.

எங்களது நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் சர்வதேச தர நிர்ணயத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதை நாங்கள் எல்லோரும் அறிவோம். உண்மையில் இந்த பல்கலைக்கழகங்களின் தரத்தை, சர்வதேச புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களுக்கு நிகரான தரத்திற்கு மேம்படுத்துவதென்பது குறுகிய கால வேலைத்திட்டத்திற்குள் சாத்தியப்படுத்த முடியாத ஒரு காரியமாகும். இதற்கு நிறைந்த அர்ப்பணமான உழைப்புத் தேவை. இந்த நாட்டிலிருக்கின்ற அரசியலாளர்களும் அறிவார்ந்த சமூகத்தினரும் ஓரணியில் திரண்டு தம்மை அர்ப்பணித்து உழைத்தால் இதைச் சாத்தியப்படுத்தலாம்.

இன்று எங்களது பட்டப்படிப்பின் தரமும் கேள்விக்குறியாக இருக்கின்றது. குறிப்பாக கலை, வர்த்தக பிரிவுகளிலிருந்து பெருந்தொகையான மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படுகின்றார்கள். அதாவது, பட்டப்படிப்பை மேற்கொள்ளும் கிட்டத்தட்ட 60 சதவீதமான மாணவர்கள் கலை, வர்த்தகப் பிரிவுகளைச் சார்ந்தவர்களாகத்தான் இருக்கின்றார்கள். இவர்களது skill development என்பதும் கேள்விக்குறியாக இருக்கின்றது. இதை மேம்படுத்த வேண்டும். அதற்கான திட்டம் பல்கலைக்கழகங்களிலிருந்தே உருவாக்கப்பட வேண்டும்.

இன்றைய தொழில்வாய்ப்புச் சந்தையில் இவர்களில் அதிகளவு வீதமானோர் வேலையற்றவர்களாக இருக்கின்றார்கள். தொழில் வாய்ப்புக்களில் தங்களை உட்படுத்திக்கொள்ள முடியாத அளவுக்குத்தான் இவர்களது வினைத்திறன் இருக்கின்றது. ஆகவே, ஓர் அர்த்தமுள்ளதாக, எல்லாத் தொழிற்றுறைகளிலும் அவர்கள் புகக்கூடிய ஒரு சூழலை உருவாக்கும் முகமாக இவர்களின் பட்டப்படிப்பு அமையவேண்டுமாயின் பல்கலைக்கழகங்களில் அவர்களது கல்வியை மேம்படுத்துவதற்குரிய திட்டங்களைத் தயாரித்து அவற்றை மேம்படுத்த வேண்டும். அதனடிப்படையில், கலைப்பிரிவில் உள்வாங்கப்படுபவர்களின் வீதத்தைக் குறைப்பதற்காக technology stream என்ற புதிய ஒரு தொழில்நுட்பப் பாடத்திட்டத்தினை அரசாங்கம் அண்மையிலே உயர் வகுப்புக்களில் அறிமுகப்படுத்தியது.

கடந்த வருடம் - 2013ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தரத்தில் புதிய தொழில்நுட்ப பாடப் பிரிவானது நாடு தழுவிய ரீதியில் 250 பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. வடக்கிலே 20இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் இதற்காகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்புதிய பாடப் பிரிவில் உள்வாங் கப்பட்டிருக்கின்றார்கள். க. பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் மற்றும் விஞ்ஞானபாடங்களில் திறமைச் சித்தியைப் பெறமுடியாத மாணவர்கள் இப்பிரிவுக்குள் இணைக்கப்பட்டிருக்கின்றார்கள். இன்றேல், இவர்கள் கலை, வர்த்தகப் பிரிவு-களைத் தெரிவுசெய்ய வேண்டிய கட்டாய நிலைதான் இவ்வளவு காலமும் இருந்துவந்தது. ஆனால், தற்போது இந்நிலைமை மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றது.

2010ஆம் ஆண்டு உயர் கல்வி அமைச்சுக்கு 20 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2014ஆம் ஆண்டு 40 பில்லியன் ரூபாயாக இவ்வொதுக்கீடு அதிகரித்திருக்கின்றது. இது, அரசாங்கம் உயர் கல்விக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது. கடந்த வருடத்தைவிட, இவ்வருடம் 8 பில்லியன் ரூபாய் மேலதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

அதுமட்டுமல்ல, அரச பல்கலைக்கழகத்துக்கு உள்வாங்குகின்ற மாணவர்களின் எண்ணிக்கையானது, 22,000 இலிருந்து 25,000ஆக அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. மேலதிகமாக 3,000 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படுகின்றார்கள். இது உண்மையிலே வரவேற்கக்கூடியது.

அவ்வாறே, பல்கலைக்கழகங்களில் பல புதிய பீடங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. மூன்று பல்கலைக் கழகங்களில் பொறியியல் பீடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் யாழ். பல்கலைக்கழகத்திலும் பொறியியல் பீடமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை நான் இச்சபையிலே மிகவும் சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

உண்மையிலே யாழ். பல்கலைக்கழகத்திற்கு பொறியியல் பீடமொன்று தேவையென 1978ஆம் ஆண்டிலிருந்தே தமிழ் கல்விச் சமூகத்தினர் கோரிக்கை விடுத்து வந்திருக்கின்றனர். கிட்டத்தட்ட 36 வருடங்களாக தமிழ் மக்களின் கனவாக இருந்துவந்த பொறியியல் பீடமானது, கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அறிவியல் நகரில் பிரமாண்டமான நிலப்பரப்பில் - 560 ஏக்கர் - அமைக்கப்பட்டு, கடந்த பெப்ரவரி 6ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. இது தமிழ் கல்விச் சமூகத்தைப் பொறுத்தவரையில் மகிழ்ச்சிகரமான ஒரு விடயமாகும்.

தமிழ் மக்களின் 36 வருடகாலக் கனவு தற்போது நிறைவேறியிருக்கின்றது. இப்பல்கலைக்கழகத்தின் கட்டிட நிர்மாணப் பணிகளுக்காக 2400 மில்லியன் ரூபாயை அரசு ஒதுக்கியிருக்கின்றது. தற்பொழுது, கட்டட நிர்மாணப் பணிகள் துரிதகதியில் - வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

கடந்த முப்பது வருடகால யுத்தம் தமிழர்களின் கல்வியில் மிகப் பெரிய பாதிப்பை - தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அந்தக் காலப்பகுதியில் அங்கு கல்வி நிறுவனங்கள் இயங்க முடியவில்லை. யாழ். பல்கலைக்கழகம்கூட சிறப்பாக இயங்கக்கூடிய ஒரு சூழல் இருக்கவில்லை. ஆனால், இன்று எமது கல்விச் சமூகம் அந்த நிலைமையிலிருந்து மீண்டிருக்கின்றது; இன்று யாழ். பல்கலைக்கழகம் திறம்பட இயங்குகின்றது.

யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டு ஓர் இயல்பான - சுமூகமான - சமாதானமான நிலைமை நிலவுவதால்தான் இன்று கல்வியில் மேம்பாடடைய முடிந்திருக்கின்றது.

இந்த மேம்பாடு தொடர்ந்தும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். இன்னும் யாழ். பல்கலைக்கழகத்துக்குத் தேவையான பல்வேறு விடயங்கள் நிறைவு செய்து கொடுக்கப்பட வேண்டும் என்பதை நான் இங்கு வலியுறுத்துகின்றேன். அங்கு விடுதி வசதிகள் அவசியமாக இருக்கின்றன. உயர் கல்வி அமைச்சரின் நிதியொதுக்கீட்டைக் கொண்டு அதற்கான கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. அங்கு மேலும் கட்டட வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் மற்றும் உபகரணங்கள், தளபாடங்கள் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்காகவும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நிதி ஒதுக்கீடுகளை வழங்க முன்வர வேண்டும் என்று நான் இங்கு வலியுறுத்துகின்றேன்.

இன்னொரு முக்கியமான விடயத்தை நான் இங்கு குறிப்பிட வேண்டும். அதாவது அரசாங்கம் அண்மையிலே அறிமுகப்படுத்திய University Township Project - பல்கலைக்கழக நகரமயமாக்கல் திட்டத்தில் யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகமும் உள்வாங்கப்பட்டிருப்பது உண்மையிலே மகிழ்ச்சியான விடயம். இலங்கையிலே இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்பட்ட மூன்று பல்கலைக்கழகங்களில் யாழ். பல்கலைக் கழகமும் ஒன்றாகும். இதற்காக 2,270 மில்லியன் ரூபாய் பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றது. இந்தத் திட்டத்தின் first stage இன் அமுலாக்கத்துக்காக யாழ். பல்கலைக்கழகம் 500 மில்லியன் ரூபாய்க்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பித்திருக்கின்றது. உடனடியாக அந்த நிதி ஒதுக்கீட்டைச் செய்து அந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இலங்கையிலே அதிக பீடங்களைக் கொண்ட பல்கலைக்கழகங்களில் முதலாவதாக பேராதனைப் பல்கலைக் கழகமும் இரண்டாவதாக யாழ். பல்கலைக்கழகமும் விளங்குகின்றன. இது உண்மையிலே எங்களுக்குப் பெருமை சேர்க்கின்ற விடயம்.

யாழ். பல்கலைக்கழகத்திலே இவ்வளவு காலமும் விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமா பயிற்சி நெறி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. இந்தப் பயிற்சி நெறியை ஒரு பட்டப்படிப்புக் கற்கைநெறியாக மாற்றவேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று கடந்த 5-6 வருட காலமாக அங்கு கடற்றொழில் டிப்ளோமா பயிற்சி நெறி மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. அந்தப் பயிற்சி நெறியையும் கடற்றொழில் பட்டப்படிப்புக் கற்கைநெறியாக மாற்றியமைக்க வேண்டும். இவ்விடயங்களைக் கருத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென வலியுறுத்துகின்றேன்.

வடக்கு, கிழக்கிலே ஆயிரக்கணக்கான குடும்பங்களைச் சேர்ந்த பெருந்தொகையான மக்கள் கடற்றொழிலை ஜீவனோபாயமாகக்கொண்டு வாழ்கின்றார்கள். ஆகவே, அவர்கள் நவீன தொழில்நுட்ப முறையில் கடற்றொழிலை மேற்கொள்வதற்கு உதவியாக யாழ். பல்கலைக்கழகத்திலே கடற்றொழில் பட்டப்படிப்புக்கான பீடமொன்று அமைவது பொருத்தமாக இருக்கும். தமிழ்நாட்டின் தூத்துக்குடிக் கரையோரப்பகுதியிலுள்ள பல பல்கலைக்கழகங்களில் கடற்றொழில் விஞ்ஞான பட்டப்படிப்பு கற்கைநெறி மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையை நாங்கள் உதாரணமாகக் கொள்ளலாம்.

மேலும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலே சுற்றுலாத்துறைக்கான கற்கைநெறியொன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து உயர்கல்வி அமைச்சுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அதனையும் கருத்திற்கொண்டு செயற்படுத்த வேண்டும்.


கடந்த காலங்களில் வடக்கிலும் தெற்கிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் அரசியல் தலையீடு காரணமாக உயர் கல்வி மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுப் படுபாதாளத்தை நோக்கிச் சென்றுள்ளமையை வரலாறு எடுத்துக்காட்டுகின்றது. ஆகவே, அரசியல் இலாபத்துக்காக பல்கலைக்கழகங்களில் தயவுசெய்து அரசியலைப் புகுத்தாதீர்கள் எனவும் அரசியல் நடவடிக்கைகளுக்காக பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்காலத்தைப் பாழடிக்காதீர்கள் எனவும் அரசியல்வாதிகளிடம் நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

ஏனெனில் இலங்கை போன்ற மூன்றாம் உலக வறிய நாடுகளின் மூலதனமாக கல்வியே இருந்திருக்கிறது. இன்று இலங்கை பல அறிவார்ந்த சமூகத்தினரை வெளிநாடுகளுக்கு அனுப்பியிருக்கின்றது. ஆகவே, இலங்கையில் கல்வி தொடர்ந்தும் வளர்ச்சியடைய வேண்டுமாயின் தயவுசெய்து அரசியல்வாதிகள் எவரும் பல்கலைக்கழகக் கல்விக்குள் அரசியல் செய்ய வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கின்றேன். நாங்கள் வரலாற்று ரீதியாக அதன் பாதிப்புக்களை உணர்ந்திருக்கிறோம்.

**இலங்கை போன்ற மூன்றாம் உலக வறிய நாடுகளின் மூலதனமாக கல்வியே இருந்திருக்கிறது. ஆகவே, அரசியல் இலாபத்துக்காக பல்கலைக்கழகங்களில் தயவுசெய்து அரசியலைப் புகுத்தாதீர்கள் எனவும் அரசியல் நடவடிக்கைகளுக்காக பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்காலத்தைப் பாழடிக்காதீர்கள் எனவும் அரசியல்வாதிகளிடம் நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.**

# இலங்கைக்கு ஆதரவான வாக்குகளை எதிராக திருப்பியுள்ளார் பீரிஸ்

## தயான்ஜயதிலக விசனம்



ஜெனிவாவில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நிகழ்த்திய உரை மனிதஉரிமைகள் பேரவையில், இலங்கைக்கு வாக்குகளை தேடித்தருவதற்குப் பதிலாக, ஆதரவாக வாக்களிக்கவிருந்தவர்களையும், எதிராக வாக்களிக்க தூண்டும் வகையில் இருந்ததாக இலங்கையின் மூத்த இராஜதந்திரி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வெளிநாட்டு பத்திரிகை ஒன்றில்,எழுதியுள்ள தயான் ஜயதிலக, அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் உரை, மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கைக்கு வாக்குகளைத் தேடித் தருவதற்குப் பதிலாக, ஆதரவாக வாக்களிக்கவிருந்தவர்களையும், எதிராக வாக்களிக்கத் தூண்டும் வகையில் இருந்தது.

இலங்கை ஜெனிவா மாநாட்டில் மிகப்பெரிய நெருக்கடிக்கு உள்ளாகி இருப்பதாக தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில், அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் இந்த உரை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்பட்டது. ஆனால் அவர் ஏற்கனவே எழுதி வைத்த குறிப்பினை பக்கம் பக்கமாக வாசித்து முடித்தாரே தவிர, இலங்கை மீது குற்றங்கள் இல்லை என்பதை அழுத்தமாக கூறத் தவறிவிட்டார். அத்துடன் அவர் தமது உரையின் போது சபையில் இருந்தவர்களை நிமிர்ந்து பார்க்க வைக்கவோ, தாம் கூறும் விடயங்களுக்கு முகத்திலும், உடல சைவிலும் பாவனைகள் செய்யவோ இல்லாமல், உயிரோட்டம் இல்லாத உரை ஒன்றையே நிகழ்த்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதனால் இலங்கை அரசாங்கம் சிறந்த ஒரு வாய்ப்பை நழுவவிட்டிருப்பதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# ஆபிரிக்க ஒன்றியத்தில் இணைய அரசாங்கம் தீவிரமுயற்சி

ஆபிரிக்க ஒன்றியத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆபிரிக்க ஒன்றியத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாடாக இலங்கையை மாற்றும் முனைப்புக்களில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

54 நாடுகளைக் கொண்ட ஆபிரிக்க ஒன்றியம் இதுவரையில் உலகின் 72 நாடுகளை அங்கீகரித்துள்ளது.

ஆசிய நாடுகளின் வரிசையில் ஜப்பான், பாகிஸ்தான், இந்தியா, கொரியா, சீனா போன்ற ந[illegible]ளை ஆபிரிக்க ஒன்றியம் அங்கீகரித்துள்ளது.

இலங்கை[illegible] குறித்த நாடுகளின் வரிசையில் இடம்பிடிக்கச் செய்யும் [illegible]ளில் வெளிவி[illegible]ார அமைச்சு ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

1999ஆம் ஆண்டு ஆபிரிக்க ஒன்றியம் உருவாக்கப்பட்டது.

நாடுகளுக்கு இடையில் ஒற்றுமையை மேம்படுத்தும் நோக்கில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அமைச்சர்களுக்கு பட்டங்கள் கிடைத்தவிதம் குறித்து விசாரணை

அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் விசேட பட்டங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் பெயருக்கு முன் பயன்படுத்தும் கௌரவ பட்டங்கள் எவ்வாறு கிடைத்தன என்பது குறித்து விசாரணை நடாத்தப்பட வேண்டுமென சபாநாயகர் சமால் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் போலியான முறையில் கௌரவப் பட்டங்களை பயன்படுத்தினால் அவற்றை நீக்கி விடுமாறு ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா கோரியுள்ளார்.

குறிப்பாக நாடாளுமன்ற கடித தலைப்புக்களில் இந்தப் பெயர்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.


கௌரவ பட்டங்கள் எவ்வாறு கிடைக்கப்பெற்றன, யார் வழங்கினார்கள் என்பது குறித்து விசாரணை நடாத்தப்படும் என சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

தேசமான்ய, தேசபந்து ஆகிய கௌரவ பட்டங்கள் 1986ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலின் அடிப்படையில் ஜனாதிபதியினால் வழங்கப்படுகிறது என அமைச்சர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

லங்காபுத்ர, கலாநிதி, ஜன்ரஞ்சன போன்ற பட்டங்கள் எவ்வாறு வழங்கப்படுகின்றன என்பது பற்றி தெரியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆப்கானில் அமைதியை நிலைநாட்ட இலங்கை முன்னுதாரணமாக அமையும்

## ஜனாதிபதி ஹமீட் ஹர்சாய் தெரிவிப்பு



சமாதானத்தை நிலைநாட்டுவதில் இலங்கையை, ஆப்கானிஸ்தான் முன்னுதாரணமாகக் கொள்ள முடியும் என இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் அந்நாட்டு ஜனாதிபதி ஹமீட் ஹர்சாய் தெரிவித்தார். கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இலங்கையும், ஆப்கானிஸ்தானும் வன்முறைச் செயற்பாடுகளால் பாதிக்கப்பட்ட நாடுகள். எனினும் இலங்கையில் தற்பொழுது சமாதானம் ஏற்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானிலும் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக உள்ளது.

இலங்கை பொருளாதார வளர்ச்சியைக் கண்டு வருவதுடன், கல்வியறிவு மிக்க சமூகத்தைக் கொண்டதொரு நாடு. அதிஷ்டவசமாக இலங்கையில் சமாதானம் ஏற்பட்டுள்ளது. நாட்டை முன்கொண்டு செல்லக்கூடிய சரியானதொரு பாதையில் இலங்கை சென்று கொண்டுள்ளது. நாட்டின் மனித உரிமைகள் மற்றும் மக்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்த சமாதானம் ஒரு கருவியாகும்.

சமாதானத்தை நிலைநாட்ட இலங்கையின் அனுபவத்தை ஆப்கானிஸ்தான் முன்னுதாரணமாகக் கொள்ள முடியும். இலங்கை எவ்வாறு சமாதானத்தை எட்டியது என்பது குறித்து ஆப்கானிஸ்தானில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஜனாதிபதிக்கு நான் விளக்கமளிக்க எதிர்பார்த்துள்ளேன். நாட்டில் சமாதானத்தையும், நிலைப்புத் தன்மையையும் ஏற்படுத்த இலங்கையை ஒரு முன்னுதாரணமாகக் கொள்ள முடியும் என்பதை புதிய ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறுவேன் என்றும் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் ஹர்சாய தெரிவித்தார்.

அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்படவிருக்கும் இருதரப்பு பாதுகாப்பு உடன்படிக்கை தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி, நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கே நாம் முன்னுரிமை கொடுத்து வருகின்றோம். சமாதானத்தை குலைக்கும் எந்தவொரு நடவடிக்கைக்கும் நாம் ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லையெனக் கூறினார்.

நாட்டு மக்களின் மனித உ[illegible]மைகளையும் அவர்களின் பா[illegible]காப்பையும் உறுதிப்படுத்துவதற்கு நாட்டில் சமாதானம் இருப்பது அவசியம், ஆப்கானிஸ்தானிலும் இதனை நிலைநாட்டவே நாம் விரும்புகின்றோம் என்றார்.

# நவிப்பிள்ளையின் அறிக்கைக்கு எங்கிருந்து தகவல் கிடைத்தது?

## கேட்கிறது அரசாங்கம்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால் வெளியிடப்பட்ட அறிக்கைக்கு எங்கிருந்து தகவல்கள் கிடைத்தன என அரசாங்கம் கேள்வி எழுப்பியுள்ளது. இலங்கை தொடர்பில் நவநீதம்பிள்ளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

இந்த நிலையில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஐக்கியநாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை சந்தித்துள்ளார்.

இலங்கை தொடர்பான நவநீதம்பிள்ளையின் நிலைப்பாடு ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அமைச்சர் பீரிஸ் இந்தச் சந்திப்பின் போது சுட்டிக் காட்டியுள்ளார். சில நாடுகள் இலங்கைக்கு எதிராக செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். இலங்கை தொடர்பிலான முன்கூட்டியே தீர்ப்புக்கள், தண்டனை விதிக்கும் நோக்கிலான நகர்வுகள் நாட்டின் நல்லிணக்க முனைப்புக்களை மோசமாகப் பாதிக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில நாடுகளின் அரசியல் சக்திகள் தேர்தல் வெற்றிக்காக இலங்கையை உதைபந்தாக பயன்படுத்தி வருகின்றன என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் எடுத்து வரும் முனைப்புக்கள் குறித்து அமைச்சர் பீரிஸ், நவநீதம்பிள்ளைக்கு தெளிவுபடுத்தியுள்ளார். யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட வலயங்களில் அபிவிருத்திப் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிததுள்ளார்.

நவநீதம்பிள்ளையின் அறிக்கை ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அமையவில்லை எனவும், அதன் தரவு உள்ளடக்கங்கள் பிழையானவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.பக்கச்சார்பான முறையில் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். நவநீதம்பிள்ளையின் அறிக்கையானது ஒரு பக்கச்சார்பானதும், அரசியல் ரீதியான நோக்கங்களைக் கொண்டதுமாக அமைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.அறிக்கையில் இலங்கையின் பதில் விளக்கங்கள் உள்ளடக்கப்படாமை துரதிஷ்டவசமானது என அவர் தெரிவித்துள்ளார்.

# அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற மறுக்கும் அரசு

## குற்றம் சுமத்துகிறார் ரணில்

அரசாங்கம் சர்வதேசத்திற்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு வாக்குறுதி அளித்துள்ளதாக எதிர்க்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது, உதாசீனம் செய்கின்றது. அரசாங்கம் இரட்டை நிலைப்பாட்டை பின்பற்றி வருகின்றது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை அரசாங்கம் முன்வைக்காமல் இருந்திருக்கலாம்.


அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை.

பல்வேறு காரணங்களைக் கூறி பரிந்துரைகளை அமுல்படுத்துவதனை அரசாங்கம் உதாசீனம் செய்து வருகின்றது என ரணில் விக்ரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை, ஜெனிவா மற்றும் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் கருத்து வெளியிடும் போது நிதானமாக இருக்க வேண்டுமென கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

வெளியிடப்படும் கருத்துக்களை திரிபுடுத்தி எதிர்க்கட்சிகள் மீது அரசாங்க ஊடகங்கள் தேசத்துரோக முத்திரை குத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

தலைமைத்துவ பேரவையின் உறுப்பினர்களுக்கும் ரணில் விக்ரமசிங்கவிற்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது இந்த விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளன.


யாழ்.பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்களின் செயற்பாடுகளை பலப்படுத்தும் வகையில் நேற்று கலந்துரையாடல் ஒன்று இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட சிவில் குழு உறுப்பினர்களையும், வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர உரைநிகழ்த்துவதை யும், யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கே.எஸ்.பி.ரோஹாணடயஸ் உரையாற்றுவதையும் காணலாம். (படங்கள்:ஆர்.இராஜகுமார்)

# நாம் மாணவருக்கு வழிகாட்டியாக இல்லாதது பாரதூரமான குற்றமாகும்

## மேல் நீதிமன்ற நீதியரசர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பெரியோர்களாகிய நாம் இளைஞர்கள், மாணவர்களுக்கு வழிகாட்டிகளாக இருக்க வேண்டும் ஆனால் இன்று அவர்களுக்கு வழிகாட்டுவதற்கு யாரும் தயாரில்லை. நல்வழிகளைப் பார்த்துப் பின்பற்றுவதற்கு பிள்ளைகளும் தயாரில்லை. இது எமது சமூகத்தில் இடம் பெறும் பாராதூரமான குற்றமாகும் என மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேம்சங்கர் தெரிவித்துள்ளார்.

திசைகாட்டி வீசா ஆலோசனை நிறுவனத்தினால் துன்னாலை பிரதேச இலவச அறநெறிப் பாடசாலை ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விகாரைகள், தேவாலயங்கள், பள்ளிவாசல் போன்ற வழிபாட்டுத் தலங்களில் உள்ள சமயப்பெரியார்கள் செய்யும் வழிகாட்டுதல்கள் இந்து சமய ஆலயங்களில் காணப்படவில்லை என்பது மிகவும் வேதனைக்குரியது. இந்து சமயத்தில் பூஜை வழிபாடுகளை நடாத்துகிறார்களே தவிர ஒருவரை வழிப்படுத்தக் கூடிய எந்த விதமான செயற்பாடுகளையும் இந்துக் குருமார் செய்வதில்லை. இது மிகவும் வருத்தமானதும் வேதனை மிக்கதுமாக உள்ளது.

அறநெறி என்பது வெறுமனே ஆலயத்திலே கிரியைகள், சடங்குகள் எவ்வாறு இடம்பெறுகின்றன என்பது மட்டுமல்ல எமது நாளாந்த செயற்பாடுகளில் கூட அறநெறி காணப்படுகின்றது. 'தொட்டில் பழக்கம் சுடுகாடுவரை' என்பது போல சிறுவயதிலிருந்தே நாம் அறநெறி கருத்துக்களை பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும்.

மேலும் மேலைத் தேச நாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்பவர்கள் பிள்ளைகளை சிறுவயதிலேயே அறநெறி பாடசாலைகளுக்கு அனுப்புகிறார்கள். மேலை நாடுகளில் வாழ்பவர்கள் இவ்வாறு செய்யும் போது பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்திலே உள்ள நாம் ஏன் இவ்வாறு செய்யக் கூடாது ஏன் இந்தப் பழக்கத்தை நாம் பின்பற்றக் கூடாது?

வடக்கு கிழக்கிலே முன்நூற்று எழுபது அறநெறிப் பாடசாலைகள் பதிவு செய்யப்பட்டு இயங்கிவருகின்றன. ஆனால் அவற்றின் அடைவு திறன் பூரணமானதாக இல்லை என்ற ஒரு ஏக்கம் இந்து சமய திணைக்களத்திலே உள்ளது.

இன்று பாடசாலைக்குச் செல்கின்ற தரம் ஒன்று பிள்ளைகள் தனியார் கல்விநிலையம் செல்கின்றனர். பிள்ளைகளின் மீது அளவுக்கதிகமாக கற்றல் செயற்பாட்டை திணிக்கின்றபோது.

அந்தப் பிள்ளை மனநோயாளி ஆக மாறுகிறதே தவிர சமூகத் துக்கு ஏற்ற பிரஜையாக மாறுவதில்லை. கல்விப் பொதுத்தரா தரசாதாரண தரம் கற்கும் வரை தனியார் கல்வி நிலையங்களிலே கற்க வேண்டிய தேவை இல்லை.

திசைகாட்டி நிறுவனம் இன்று இலவச அறநெறிப்பாடசாலையை ஆரம்பிப்பதை பாராட்டுகின்றேன். அவர்களது இந்த சமய சமூக பணி மேன்மேலும் வளர வாழ்த்துகிறேன் என்றார். (54)

# மாணவர்கள் 'எஸ்' தரச்சித்தி பெற வலிகாமத்தில் செயற்றிட்ட நடவடிக்கை

வலிகாமம் கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகளிலிருந்து கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் தோற்றவுள்ள மாணவர்களை ஆகக் குறைந்தது 'எஸ்' தரத்தில் சித்தி பெற வைக்கும் செயற்றிட்டம் எதிர்வரும் 17 ஆம்திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவிருப்பதாக வலிகாமம் வலய கல்விப் பணிப் பாளர் செ.சந்திரராஜா தெரிவித்துள்ளார்.

இதன்படி,வலிகாமம் கல்வி வலயத்தில் கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய பாடங்களில் கல்வி கற்பிக்கும் துறைசார் ஆசிரியர்கள் இச்செயற்றிட்டத்தில் இணைக்கப்படவுள்ளதுடன் கோட்ட மட்டத்தில் உள்ள பாடசாலைகளிடையே இத்திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது. குறித்த செயற்றிட்டம் தொடர்பாக ஆராய்வதற்கென வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள அதிபர்களுடன் முக்கிய கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது.(48)

# முரசின் இன்றைய பலன்

(08.03.2014 சனிக்கிழமை)



விஜய வருஷம் மாசி மாதம் 24 ஆம் திகதி.
சப்தமி / அமிர்தசித்தம் .
ரோகினி நட்சத்திரம் மு.இ. 9.21 வரை. பின் மிருக சீரிடம்.
இராகு காலம் 09.24 - 10.54 வரை. சுபநேரம் 03.24 - 04.54 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பிள்ளைகளுடன் முகம் பார்த்துக் கதைப்பதனால் துயர் விலகிப்போதல், தாமதித்த வேலைகள் நிறைவடைதல். |
| ரிஷபம் | நோய் குணமடையும் மகிழ்ச்சி பெருகும், ஆடம்பரச் செலவைக் குறைக்க முற்படுதல். |
| மிதுனம் | தடைப்பட்ட பயணம் நிறைவேறும், பேச்சுவன்மையால் பிறரைக் கவர்தல், காரிய சித்தி ஏற்படும். |
| கடகம் | தாயின் உடல் நலம் மேம்படும், துன்பங்கள் நீங்கும், தைரியமான முடிவுகளை எடுத்ததால் தொழில் சிறப்புறல். |
| சிம்மம் | பதவி நிரந்தரம் கிடைக்கும், மனதில் சந்தோசம் கிட்டும், வெளியூர் பயணம் செல்ல வாய்ப்புக் கிட்டும். |
| கன்னி | இடமாற்றத்தால் குழப்பம் ஏற்படும், கருத்து வேற்றுமை விலகும், மகிழ்ச்சி ஏற்படும். |
| துலாம் | வெளியூர் உறவினர் வருகை, குடும்பத்தில் மகிழ்ச்சி கிட்டும், நிதானமாகச் செயற்படல் அவசியம். |
| விருச்சிகம் | பிறருக்கு உதவுதல், தொழில் புதிய திட்டங்கள் நிறைவேறும், நன்மதிப்புக் கிட்டும். |
| தனுசு | துக்க நிலை ஏற்பட வாய்ப்பு, பண உதவிகள் கிடைப்பதால் மனதிற்கு இதமளிக்கும். |
| மகரம் | மன ஒருமைப்பாடு .அவசியம், பொறுப்புக்கள் அதிகரித்ததனால் பதட்டம் ஏற்படும். |
| கும்பம் | இழுபட்ட நிலுவைப் பணம் கிடைத்ததால் பிரச்சினை அற்றுப்போதல், கடமையில் அவதானம் தேவை, நன்மைக்ள் கிட்டும். |
| மீனம் | விவாத முயற்சி தடைப்படும், குடும்பத்தில் சர்ச்சை ஏற்படும், பிறருடன் ஒப்பிட்டுப் பேசியதால் குடும்பத்தில் சர்ச்சை ஏற்படும். |

# வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க அரச அதிபர் ஏற்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் இதற்கென விசேட நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ளது.

வறட்சி பாதிப்பு தொடர்பான விபரங்களை திரட்டி அனுப்புமாறு கோரி பிரதேசசெயலர்களுக்கு சுற்றறிக்கை ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

பிரதேச செயலர்க்ள் பிரதேச செயலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி. உத்தியோகத்தர்கள் மூலமாக இந்த விபரங்களைத் திரட்டும் நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. கடந்த வருடம் பருவகால மழை பொய்த்துள்ளதால் நெற்செய்கை உட்படப் பல பயிர்ச் செய்கையும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (90)

# உளநலம் முதன்மை பெற சமூக அபிவிருத்தி அவசியம்

பொருளாதார அபிவிருத்தியுடன் இணைந்ததாக சமூக அபிவிருத்தியையும் முன்னெடுக்கும் போது உளநலம் முதன்மை மிக்கதாக இருக்கும் என கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் உளநல அதிகாரி தேவராஜா துஸ்யந்தன் தெரிவித்தார்.

பளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள முகாவில் கிராமத்தில் உளநல செயற்பாட்டுத் திறன் விருத்திச் செயலமர்வு நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற போது வள வாளர்களாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

உளநலமுள்ள சமூகம் தான் அபிவிருத்தியினை நிலைபெறச் செய்வதில் பங்களிக்கமுடியும். பொருளாதார அபிவிருத்தியுடன் இணைந்ததாக சமூக அபிவிருத்தியையும் முன்னெடுக்கும்போது உளநலம் முதன்மை மிக்கதாக இருக்கும்.


மேலும் சிறந்த உளநலம் மிக்க சமூகத்தின் உருவாக்கத்துக்காக அரசும் தனது பங்களிப்பை அமைச்சு மட்டத்தில் செய்துவருகின்றது என்றார்.

பளை பிரதேச செயலகப் பிரிவின் உளநலப் பிரிவால் நடாத்தப்பட்ட இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் உளநல அதிகாரி தேவராஜா துஸ்யந்தன், பளை .பிரதேச செயலக பிரிவு சமூக சேவைகள் அதிகாரி கே.கேதினி ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் முகாவில் கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் கலந்து கொண்டனர். (90)

## ஆசிய கிண்ண கிரிக்கெட் இன்று இறுதியாட்டம்







பாகிஸ்தான் எதிர் இலங்கை

**நேரம் : பிற்பகல் 1.30**
**இடம் : டாக்கா**

# சம்பள ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இலங்கை அணி வீரர்கள் மறுப்பு

(கொழும்பு)

தற்போது பங்களாதேஷில் ஆசியக் கிண்ணப் போட்டிகளில் விளையாடி-வரும் இலங்கைக் கிரிக்கெட் அணி வீரர்கள், இலங்கை கிரிக்கெட் சபையுடனான புதிய சம்பள ஒப்பந்தத்தில் கைச்சாத்திட மறுத்துவருகின்றனர்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) ஏற்பாட்டில் நடக்கும் நிகழ்வுகளில் கிரிக்கெட் வீரர்களின் நிழற்படங்களைப் பயன்படுத்துவதற்காக இலங்கை கிரிக்கெட் சபைக்கு கொடுக்கப்படும் கொடுப்பனவில் 20 வீதத்தை தமக்கு வழங்க வேண்டும் என்றுகோரியே இலங்கை வீரர்கள் ஒப்பந்தத்தை ஏற்க இன்னும் முன்வரவில்லை.

கடந்த ஆண்டுக்கு முந்தைய ஆண்டு வரை ஐ.சி.சி.யிடமிருந்து கிடைத்துவந்த பணத்தில் 25 வீதத்தை கிரிக்கெட் வீரர்களுக்கு இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் வழங்கிவந்துள்ளது. ஆனால் கடந்த ஆண்டு முதல் அந்தக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டன.

இதனால், இம்முறை சம்பள ஒப்பந்தத்தில் ஐ.சி.சி. இன் கொடுப்பனவுகளில் 20 வீதம் தமக்கு வழங்கப்பட வேண்டும் என்று இலங்கை வீரர்கள் கோரி வந்துள்ளனர்.

கடந்த உலகக் கிண்ணப் போட்டிகளை நடாத்துவதற்காக 3 விளையாட்டரங்குகளை அமைத்த செலவுகளுக்காக இலங்கை கிரிக்கெட் சபை, சுமார் 2 பில்லியன் ரூபா கடன் சுமையில் திணறுவதாக தெரிவிக்கப்படுகின்றது

இதேவேளை, இலங்கை அணி பங்களாதேஷிற்கு புறப்பட முன்னதாக இலங்கை கிரிக்கெட் சபை சார்பில் தலைமைத் தெரிவாளர் சனத் ஜயசூரியவுடன் நடாத்திய பேச்சுவார்த்தையின் பலனாக ஐ.சி.சி. கொடுப்பனவு விவகாரம் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையில் அணி வீரர்கள் இருந்துள்ளனர்.

எனினும் அந்தக் கொடுப்பனவுகள் பற்றிய குறிப்புகள் இன்றியே இம்முறை புதிய சம்பள ஒப்பந்தம் வீரர்களின் சம்மதத்துக்காக அனுப்பப்பட்டுள்ளதால், அதனை ஏற்க இலங்கை அணி வீரர்கள் மறுத்துவருகின்றனர்.

கிரிக்கெட் வீரர்களின் படங்களை பயன்படுத்துவதற்காக கிரிக்கெட் சபைகளுக்கு ஐ.சி.சி. வழங்கும் பணத்தில் ஒரு பங்கை அணி வீரர்களுக்கு வழங்கும் வழக்கம் வேறெந்த நாடுகளிலும் இல்லை என்று இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முன்னணி தரத்திலான ஐந்து வீரர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒப்பந்த சம்பளம் மற்றும் போட்டிகளில் கலந்துகொள்வதற்கான கொடுப்பனவுகள் எல்லாம் சேர்த்து பார்த்தால் ஒருவருக்கு இலங்கைப் பணத்தில் 55 மில்லியன் ரூபா பணம் ஆண்டுக்கு கிடைப்பதாக கிரிக்கெட் சபையின் செயலாளரை மேற்கோள் காட்டும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ருவென்ரி-20 நாளை ஆரம்பம்

தென்னாபிரிக்க, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக்கொண்ட ருவென்ரி-20 தொடரின் முதல் ஆட்டம் நாளை தென்னாபிரிக்காவின் பேர்த் எலிசபெத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டித் தொடரிலிருந்து தென்னாபிரிக்க அணி வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரெய்ன் மற்றும் அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜோன்சன் ஆகியோருக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளதாக இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் தெரிவித்துள்ளன.

# சுமையாக மாட்டேன்

(மிர்பூர்)

பாகிஸ்தான் அணியில் சுமையாக ஒரு போதும் நீடிக்கமாட்டேன் என அதிரடி வீரர் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

எனது ஆட்டத் திறன் மூலம் நாட்டிற்கு சிறப்பான பங்களிப்பை அளிக்க ஆசைப்படுகிறேன். ஆனால் எல்லா நாளும் இதே போன்று ஓட்டங்கள் குவிக்க முடியாது. அதனால் தான் துடுப்பாட்டம் மட்டுமன்றி, பந்து வீச்சிலும் கவனம் செலுத்துகிறேன். இந்த வழியில் அதாவது துடுப்பாட்டம் அல்லது பந்து வீச்சில் எனது திறமையை வெளிப்படுத்தி, அணிக்கு உதவிட என்னைத் தயாராக வைத்துக் கொள்ள விரும்புகிறேன்.

2015ஆம் ஆண்டு உலகக் கோப்பையை ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளேன். உடல் தகுதி இருக்கும் வரை எனது வாழ்க்கை முழுவதையும் கிரிக்கெட்டுக்கு அர்ப்பணித்து தொடர்ந்து விளையாடுவேன். ஆனால் பாகிஸ்தான் அணிக்கு சுமையாக இருக்கிறேன் என்று எப்போது உணரத் தொடங்குகிறேனோ அந்த தினமே சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்று விடுவேன். மற்றவர்கள் அது பற்றி (ஓய்வு குறித்து) பேச வாய்ப்புத் தரமாட்டேன்.

இந்திய மண்ணில் நான் எப்போதும் உற்சாகமாக கிரிக்கெட் விளையாடி உள்ளேன். இந்தியாவைத் தவிர வேறு எந்த இடத்திலும் இரசித்து, அனுபவித்து விளையாடியதில்லை. இந்தியாவும், பாகிஸ்தானும் அண்டை நாடுகள். எமக்குள் நல்ல உறவு இருக்க வேண்டும். கிரிக்கெட்டால் மட்டுமே இரு நாடுகள் இடையிலான உறவில் முன்னேற்றம் காண முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# எனக்கு நானே போட்டி

**ஹர்பஜன்சிங்**

(புதுடில்லி)

இந்திய வீரர்கள் எவருடனும் போட்டி கிடையாது. எனக்கு நான் மட்டுமே போட்டி என ஹர்பஜன்சிங் தெரிவித்தார்.

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங், (வயது-33). மோசமான ஆட்டத் திறன் காரணமாக அணியில் இருந்து நீக்கப்பட்டார். இவருக்குப்பதிலாக இடம் பெற்ற தமிழக சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின், உள்ளூரில் மிரட்டினாலும், அன்னியமண்ணில் சொதப்புகிறார். இதனால், ஹர்பஜன் சிங் மறுபடியும் அணிக்கு திரும்ப வாய்ப்புள்ளதாக தெரிகிறது.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே ஹர்பஜன் சிங் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இத்தனை ஆண்டு கிரிக்கெட் வாழ்க்கையில் ஒருவரை மட்டும் தான் போட்டியாக நினைப்பேன். அதாவது எனக்கு நான் மட்டுமே போட்டி. ஒருபோதும் அஸ்வின் அல்லது வேறுயாரையும் போட்டியாக நினைத்தது இல்லை.

நமக்கு நாமே போட்டியாக இருந்தால் தான் சிறந்த கிரிக்கெட் வீரராக உருவாக முடியும். மற்றபடி, தற்போதுள்ள இந்திய வீரர்கள் குறித்து எவ்வித கருத்தும் தெரிவிக்க விரும்பவில்லை.

என்னைப்பொறுத்தவரையில் வயது என்பது ஒரு நம்பர் மட்டும் தான். ஒருவர் 45 வயதிலும் திறமை வெளிப்படுத்தினால், அவரை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. இந்திய அணிக்காக இன்னும் விளையாட வேண்டும் என, விருப்பம் உள்ளது. ஏனெனில், இந்திய அணிக்காக 101 டெஸ்ட், 229 ஒருநாள் போட்டிகளில் விளையாடிய பின்பும், உள்ளூர் போட்டிகளில் விளையாடுவது கடினமாக உள்ளது. இது எனக்கு மட்டுமல்ல, பல்வேறு வீரர்களுக்கு இதுபோன்ற நிலை தான் ஏற்படுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கைகூடாத அதிர்ஷ்டம்

ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரில் சிறப்பாக ஆடிபோதும் அதிர்ஷ்டமின்மை காரணமாகவே நாங்கள் தோல்விகளைச் சந்திக்க நேர்ந்தது என பங்களாதேஷ் அணிக் கப்டன் எம். ரஹீம் தெரிவித்துள்ளார்.

ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான், இலங்கை அணிகளுக்கு எதிராக நாங்கள் சிறப்பாகச் செயற்பட்டோம். இறுதி வரை வெற்றிக்காகப் போராடியபோதும் அதிர்ஷ்டம் எமக்குக் கைகொடுக்கவில்லை. இருப்பினும் இளம் வீரர்களுக்கு இது புதிய அனுபவத்தைக் கொடுத்திருக்கும் என்று நம்புகின்றேன். இளம் வீரர்கள் சிறப்பாகச் செயற்பட்டனர். இது எதிர்வரும் உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடருக்கு சிறந்த பயிற்சிக் களமாக அமையும் என நம்புகின்றேன் எனவும் அவர் தெரிவித்தார்.

## ரொனால்டோ அசத்த வென்றது போர்த்துக்கல்

(லெய்ரியா)

கமரூன் அணிக்கு எதிரான சர்வதேச நட்பு கால்பந்துப் போட்டியில் கிறிஸ்டியானோ ரொனால்டோ அசத்த, போர்த்துக்கல் அணி வெற்றி பெற்றது.

உலகக் கோப்பை கால்பந்து தொடர் (யூன், யூலை) பிரேசிலில் நடைபெறவுள்ளது. இதற்குத் தயாராகும் விதமாக உலகின் பல்வேறு பகுதிகளில் சர்வதேச நட்பு கால்பந்துப் போட்டிகள் நடாத்தப்படுகின்றன.

போர்த்துக்கலில் உள்ள லெய்ரியாவில் நடந்த போட்டியில் போர்த்துக்கல் அணி, கமரூன் அணியை எதிர்கொண்டது. 21ஆவது நிமிடம், போர்த்துக்கல் அணிக்கு ரொனால்டோ முதல் கோல் அடித்தார். கமரூன் அணியின் வின்சென்ட் 43ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தார்.

இரண்டாவது பாதியில், போர்த்துக்கல் வீரர்கள் ரோல் மெய்ரிலெஸ் (66ஆவது நிமிடம்), பேபியோ கான்டிரோ (67ஆவது நிமிடம்), எடினோ (76ஆவது நிமிடம்) ஆகியோர் கோல் மழை பொழிந்தனர். 83ஆவது நிமிடம் கிறிஸ்டியானோ ரொனால்டோ மற்றொரு கோல் அடித்தார். இறுதியில் போர்த்துக்கல் அணி, 5-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் 2 கோல்கள் அடித்ததன் மூலம், சர்வதேச அரங்கில் போர்த்துக்கல் அணிக்காக அதிக கோல்கள் அடித்த வீரர் என்ற சாதனை படைத்தார் ரொனால்டோ. இவர் இதுவரை 110 போட்டியில், 49 கோல்கள் அடித்துள்ளார். இதற்கு முன் முன்னாள் வீரர் பாலெட்டா, 88 போட்டியில் 47 கோல்கள் அடித்திருந்தார்.



விளையாட்டு செய்திகள்

# தேசிய விளையாட்டு விழா கிளிநொச்சியில் நடாத்த முடிவு

## ஏற்பாடுகள் துரித கதியில் முன்னெடுப்பு

(கிளிநொச்சி)

தேசிய மட்ட விளையாட்டு விழா எதிர்வரும் செப்ரெம்பர் மாத பிற்பகுதியில் கிளிநொச்சியில் நடாத்தப்படவுள்ளது.

வடமாகாண வீர,வீராங்கனைகளின் விளையாட்டுத் திறனையும், ஆர்வத்தையும் அதிகரிக்கச் செய்யும் நோக்கில் விளையாட்டுத்துறை அமைச்சினால் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இந்த வருடம் நடைபெறவுள்ள தேசிய மட்ட விளையாட்டு விழாவை கிளிநொச்சியில் நடாத்தத் திட்டமிட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 24,25,26ஆம் திகதிகளில் தேசிய மட்ட விளையாட்டு விழா கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது. இதற்கான முன் ஆயத்த நடவடிக்கைகள் தற்போது தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, கிளிநொச்சி நகர மத்தியில் அமைக்கப்பட்டுவரும் விளையாட்டு கட்டடத் தொகுதியைப் பூரணப்படுத்தும் நடவடிக்கையிலும் அமைச்சு முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றது.

வடமாகாணத்தில் முதன்முறையாக தேசிய விளையாட்டுக்களை நடாத்துவது அண்மைய வரலாற்றில் முக்கியத்துவம் மிக்கதாக நோக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அலுவலர்களும் இதற்கான தயார்படுத்தல்களில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருவதனை காண முடிகின்றது. வடக்கின் விளையாட்டுத் துறை ஆர்வலர்கள் இது குறித்து மிகவும் மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளனர்.

(90)



வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்ட தலைவர் வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட கல்வளை விநாயர் அணியைக் காணலாம். இளவாலை ஹென்றியசர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரில் யங்ஹென்றிஸ் அணி சம்பியன் பட்டம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

## வலிகாமம் வலய பெரு விளையாட்டு போட்டி அட்டவணை

(தெல்லிப்பளை)

வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட பெரு விளையாட்டுப் போட்டிக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன் படி 15,17,19 ஆண் பெண்களுக்கான கரப் பந்தாட்டம் எதிர்வரும் 11,12,13ஆம் திகதிகளில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

15,19 வயதுப் பிரிவு ஆண் பெண்களுக்கான கபடிப் போட்டி பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் 13,14ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இதேதினம் 15, 19 வயது ஆண், பெண்களுக்கான மேசைப்பந்தாட்டம் உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

19 வயதுப் பிரிவு பெண்களுக்கான எறிபந்துப் போட்டி எதிர்வரும் 15ஆம் திகதி தெல்லிப்பளை யூ[illegible]ன் கல்லூரியிலும், ஆண்களுக்கான போட்டி 17,18,19ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

15,17,19 வயதுப் பிரிவு பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 17,18,19ஆம் திகதிகளில் உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதேதினம் 15,17,19 வயதுப் பிரிவு ஆண் பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற வுள்ளது.

ஆண் பெண்களுக்கான எல்லேப் போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் 20,21ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

19 வயதுப் பிரிவு உடற்பயிற்சிப் போட்டிகள் 24ஆம் திகதி சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (93,48)

## சண்டிலிப்பாய் கோட்ட கரப்பந்து வெற்றியீட்டிய அணிகள்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் ஆண், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

15,17,19 ஆகிய வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த பாடசாலைகளின் விபரங்கள் வருமாறு:

**ஆண்கள் பிரிவு:**

15வயதுப் பிரிவு முதலாமிடம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை, மூன்றாமிடம் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி.

17 வயதுப் பிரிவு முதலாமிடம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை, மூன்றாமிடம் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி.

19 வயதுப் பிரிவு முதலாமிடம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் மானிப்பாய் இந்துக் கல்லூரி, மூன்றாமிடம் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி.

**பெண்கள் பிரிவு**

15 வயதுப் பிரிவு முதலாமிடம் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம், மூன்றாமிடம் இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடம் மகா வித்தியாலயம்.

17வயதுப் பிரிவு முதலாமிடம் இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடம் மகா வித்தியாலயம, இரண்டாமிடம் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

19 வயதுப் பிரிவு முதலாமிடம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் மாதகல் சென் ஜோசப் மகா வித்தியாலயம். (48, 93)

# இறுதிப் போட்டி குழப்பம் பொலிஸ் நிலையத்தில் முறையீடு

(அளவெட்டி)

அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டு வந்த தாச்சிச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில், அணிகள் மாற்றப்பட்டமையினால் ஏற்பட்ட குழப்பநிலையில் போட்டி கைவிடப்பட்டமை தொடர்பில் போட்டியினை நடத்திய பாரதி விளையாட்டுக்கழகத்திற்கு எதிராக உடுவில் சிந்து விளையாட்டுக் கழகம் தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் கடந்த 5ஆம் திகதி முறைப்பாடு செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சுற்றுப்போட்டியில் இறுதிப் போட்டியில் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழகமும் பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக் கழகமும் விளையாடுவதாக இருந்தது.

இருந்தும், பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழக வீரர் ஒருவர் இச்சுற்றுப்போட்டியில் இரண்டு அணிகளுக்கு விளையாடியிருந்தமை போட்டி ஏற்பாட்டாளர்களினால் கண்டு பி[illegible]க்கப்பட்டு, அவ்வணி இறுதிப்போட்டியில் விளையாடுவதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

இதனால் பண்டத்தரிப்பு அறிவொளி அணியினை இறுதிப்போட்டியில் விளையாட விடாமல் தவிர்க்கப்பட்டு, அதற்குப் பதிலாக அரையிறுதியில் பண்டத்தரிப்பு அறிவொளி அணியுடன் விளையாடித் தோல்வியடைந்த உடுவில் ஆலடி சிந்து அணி இறுதிப்போட்டிக்கு அழைக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து கடந்த பெப்ரவரி 27 ஆம் திகதி இறுதிப்போட்டி இடம்பெறுவதாக இருந்த நிலையில் பண்டத்தரிப்பு சாந்தை அணியினர்



தாங்கள் இறுதிப்போட்டியில் பண்டத்தரிப்பு அறிவொளி அணியுடன் தான் விளையாடுவோம் என்று கூறியமையினால் போட்டியில் குழப்ப நிலை ஏற்பட்டது.

இந்தக் குழப்பத்திற்கு யாழ்.மாவட்டத் தாச்சிச் சங்க உறுப்பினர்கள் தீர்வு காண முற்பட்ட போதும், அது கைகூடாத நிலையில் கைவிடப்பட்டது.

இந்நிலையில், ஒத்தி வைக்கப்பட்ட இறுதிப்போட்டியில் எந்த அணிகள் விளையாடுவது என்பது தொடர்பிலும் அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழகம் பதிலளிக்க வேண்டும் என நீதிகேட்டும் உடுவில் சிந்து விளையாட்டுக் கழகம் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

விளையாட்டுப் போட்டிகளில் அடிதடி போன்ற சம்பவங்களே பொலிஸ் நிலையங்களில் அதிகம் முறைப்பாடு செய்யப்படுகின்றது. இந்நிலையில் இறுதிப் போட்டி நடாத்தப்படவேண்டும் என்று முறைப்பாடு செய்யப்பட்டமை இலங்கை விளையாட்டுத்துறை வரலாற்றில் இதுவே முதன் முறையாக இருக்கும் என பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## அரையிறுதியில் பற்றீசியன்ஸ்

(உடுவில்)

ஜெயரட்ணம் வெற்றிக் கிண்ண கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு பற்றீசியன்ஸ் அணி முன்னேறியுள்ளது. யாழ். சென்றல் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் ஜெயரட்ணம் வெற்றிக் கிண்ண கிரிக்கெட் தொடரின் காலிறுதி ஆட்டமொன்று கடந்த வாரம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வை.எம்.எச்.ஏ. அணியும், பற்றீசியன்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய வை.எம்.எச்.ஏ. அணி பத்மமுரளி, நிதர்சன், கிளிண்டன் ஆகியோரின் பந்துவீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் வை.எம்.எச்.ஏ. அணி 44.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிலாயன் 59, ராஜேந்திரம் 41 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பத்மமுரளி மூன்று, நிதர்சன், கிளிண்டன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பதிலுக்கு 171 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பற்றீசியன்ஸ் அணி மொறியன், பத்மமுரளி ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இலகுவான வெற்றிபெற்றது. இறுதியில் பற்றீசியன்ஸ் அணி 35.4 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மொறியன், பத்மமுரளி ஆகியோர் தலா 60 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் நிலாஜன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்ற பற்றீசியன்ஸ் அணி அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. (17)

# சர்வதேச மகளிர் தினம் : அன்றும் இன்றும்

- ரஞ்சனி -




தற்சமயம் உலகம் முழுவதிலும் கொண்டாடப் படும் மகளிர் தினம், சர்வதேச மகளிர் தினமாக அதிகாரபூர்வமாக அறிவிக் கப்பட்ட தினம் மார்ச் 18, 1911. ஆகவே மகளிர் தினம் கொண்டாட ஆரம்பித்து இந்த வருடத்துடன் 103 வருடங்கள் முடிந்து விட்டன.

ஃபிரெஞ்சுப் புரட்சியின் போதே பெண்கள் தங்களுக் கும் ஆண்களுக்குச் சமமான சுதந்திரம், சம உரிமை, அரசனது ஆலோசனைக் குழுமங்களில் பிரதிநிதித்து வம் கேட்டு போராட்டத்தில் இறங்கினர். எட்டு மணி நேர வேலை, வேலைக்குத் தகுந்த கூலி, அரசியலில் வாக்குரிமை ஆகியவையும் அவர்களது புரட்சிச் செயல் பாட்டில் பட்டியலிடப்பட்டன.

அப்போது ஆரம்பித்த இந்தப் • போராட்டங்கள் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் மெல்ல மெல்ல உலகம் முழுதும் பரவி பெண்களிடையே ஒரு குறிப்பிடத்தக்க அசாதாரண விழிப்புணர்வை ஏற்படுத்த ஆரம்பித்தன. பெண்கள் தங்கள் பலம் என்னவென்று உணரத் தொடங்கினர்.

பெண்ணடிமை, பெண் களை இழிவுபடுத்துதல், பெண்களை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்துதல், பெண் என்பதால் அவளை ஒதுக்குதல் ஆகிய சமுதாய போக்குகளுக்கு எதிராகவே இந்தப் போராட்டங்கள் நடந்தன.

1913 ஆம் ஆண்டு வரை பெப்ரவரி மாத கடைசி ஞாயிறு தேசிய மகளிர் தினமாக அனுசரிக்கப்பட்டது.

**மார்ச் 08**

1910ஆம் ஆண்டு கோபென் ஹேகன் நகரில் உழைக்கும் பெண்களின் மாநாடு நடை பெற்றது. அதில் ஜேர்மனி சோஷியல் டெமோக்ரடிக் கட்சியின் "மகளிர் அலுவலக"த் தலைவராக இருந்த க்ளாரா செட்கின் (Clara Zetkin) ஒரு யோசனை-யை முன்வைத்தார். அதாவது ஒவ்வொரு வருடமும் மகளிர் தினம் உலகம் முழுவதும் ஒரே தினத்தில் அனுசரிக்கப்படவேண்டும் அதில் பெண்கள் தங்கள் உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டும் என்பது அவரது யோசனை. இந்த மாநாட்டில் 17 நாடுகளிலிருந்து 100 பெண்கள் கலந்து கொண்டனர். எல்லோருமே ஒரு மனதாக இவரது யோசனையை வரவேற்றனர்.

1911ஆம் ஆண்டு மார்ச் 19 ஆம் திகதி முதல் முறையாக ஆஸ்திரியா, டென்மார்க், ஜேர்மனி, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் சர்வதேச மகளிர் தினம் அங்கீகாரம் பெற்றது. சுமார் ஒரு மில்லி யன் பெண்களும் ஆண்களு மாக பெண்களுக்கு சம உரிமை கேட்டு ஒரு பேரணி யாகத் திரண்டு பிரசாரத்திலும் ஈடுபட்டனர். இதே ஆண்டில் உழைக்கும் மகளிர் Bread and Roses என்ற போராட்டமும் நடத்தினர். இதில் பங்கு பெற்ற மகளிர் We want Bread but we want roses, too என்று எழுதப்பட்ட கொடிகளை தாங்கி ஊர்வலம் சென்றனர்.

1913 ஆம் வருடம் முதல், மார்ச் 8 சர்வதேச மகளிர் ஆண்டாக உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

**அன்றைய நிலைமை**

வேதகாலத்தில் `பெண்கள் மெத்தப் படித்தவர்களாகவும், தங்கள் கணவன்மார்களுக்கு சரிசமமாக எல்லா விஷயத்தி லும் மேன்மையாக வாழ்ந்து வந்ததாகவும் அறிஞர்கள் கூறுகின்றனர். கார்கி, மைத்ரேயி போன்ற பெண் அறிவாளிகளைப் பற்றி உபநிடதம், ரிக் வேதமும் பேசுகின்றன.

ஆனால் பிற்காலத்தில் பெண்களின் நிலை சரியத் தொடங்கியது. சதி (கணவன் உயிர் துறந்த பின் பெண்ணும் அவனுடன் தீக் குளிக்கும் வழக்கம்) குழந்தைத் திருமணங்கள் பெண் வீட்டாரிடம் வரதட்சணை கேட்பது போன்ற சமுதாயச் சடங்குகள் பெண்களுக்கு எதிராக இருந்தன.

மிகவும் சிறிய வயதில் நடந்த திருமணங்களில் பெண் வயதுக்கு வரும் முன்பே கணவன் உயிர் துறக்க நேரிட்ட சந்தர்ப்பங்களில் அந்தப் பெண்கள் ஆயுள் முழுவதும் விதவை பட்டத்துடன் சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டு வாழ நேர்ந்தது. மறுமணம் என்பது அவர்களால் மட்டுமல்ல, அவர்களின் குடும்பத்தாராலும் கூட நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாக கருதப்பட்டது. பெற்றோர் ஆதரவிலோ அவர்களது மறைவுக்குப் பின் கூடப் பிறந்தவர்களின் நிழலிலோ அவர்களது குடும்பங்களின் சம்பளமில்லா வேலைக்காரிகளாக இந்தப் பெண்கள் வாழ நேர்ந்தது.

**இன்றைய நிலைமை**

இன்று, ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் பெண்கள் முன்னேறியிருப்பது போலத் தோன்றினாலும் இது மிகவும் சிறுபான்மை தான். மூன்றாவது உலகம் என்று சொல்லப்படும் நாடுகளில் பெண்களின் நிலை இன்னும் பரிதாபத்திற்குரியதாகவே இருக்கிறது. பெரும்பான் மையான பெண்கள் தங்களது தினசரி வாழ்க்கையை நடத்திக் கொண்டு போகவே அதிகப் பிரயத்தனம் செய்ய வேண்டியிருக்கிறது. இன்னும் பல பெண்களுக்கு "கள்" ளானாலும் கணவன், "ஃபுல்" லானாலும் புருஷன் என்கிற நிலைதான்.

1975 ஆம் ஆண்டு மெக்ஸிகோ நாட்டில் நடந்த சர்வதேச மகளிர் மாநாட்டில் அடித்தட்டுப் பெண்களுக்கும், மேல்வர்க்க பெண்களுக்கும் இடையே பூதாகரமான இடைவெளி இருப்பது வெட்ட வெளிச்சம் ஆகியது. இந்த அடித்தட்டுப் பெண்களில் பெரும்பாலோர் எழுத்தறிவு இல்லாமலும், போஷாக்கு குறைந்தவர்களாக வும், வளர்ச் சியடையாத கிராமப் பகுதி களில் இருப்ப வர்களகவும், ஏழ்மையிலும், உடல்நலக் குறைவிலும் சிக்கித் தவிப்பவர்களாகவும் இருக்கிறார்கள்.

பெண் குழந்தை தங்களுக்கு கடன் சுமையை அதிகரிக்கப் பிறந்திருப்பதாகவும், ஆண் குழந்தை தங்களை காப்பாற்று வான் என்றும் பெற்றோர்கள் நினைக்கிறார்கள். உணவு, ஆரோக்கியம், படிப்பு என்று எல்லா வியஷத்திலும் இவர் கள் வஞ்சிக்கப்படுகிறார்கள். அடிப்படை உரிமை என்பது கூட இல்லாமல் பெற்றோர் காட்டும் ஒருவனை மணந்து வாழ்க்கை முழுவதும் அல்லல் படுகிறார்கள்.

இப்படிப்பட்ட நிலையிலும் கூட வளர்ந்துவரும் நாடு களான இந்தியா, இலங்கை முதலிய நாடுகளில் பொறுப் பான அரசியல் பொறுப்புகளை பெண்கள் ஏற்று நடத்தி வருவது ஒரு நல்ல அறி[illegible]றி யாகவே தெரிகிறது. இதனால் பெண்கள் சுதந்திரம் என்பது ஒரு மேற்கத்திய மந்திரச் சொல்லாக மட்டுமில்லாமல் வளர்ந்துவரும் நாடுகளிலும் எதிர்காலத்தில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கலாம்.

"பெண்களுக்கெதிரான கொடுமைகளை கண்டு அயர்ந்து போகாமல் எதிர்த்து நின்று பிரகாசிப்போம்" என்பதுதான் இந்த வருட மகளிர் தினத்தில் பெண்கள் இந்த உலகத்திற்கு தெரிவிக்கும் செய்தி.

உலகெங்கும் உள்ள பெண்களுக்கு மகளிர் தின வாழ்த்துகள்!

## பாடல்

நீ விழ்க்கவேண்டும்
ஒரு மலர்போலல்ல
ஒரு எரிமலையைப்போல.
நீ உயரவேண்டும்
ஒரு பறவைபோலல்ல
ஒரு சூரியனைப்போல.
நீ விழுவேண்டும்
ஒரு இலைபோலல்ல
ஒரு மின்னலைப்போல.
இருக்கவிடு என்னை
மலராக பறவையாக இலையாக.

- மிமோசா அஹ்மதி



பாப்பா என விளிக்கப்படுவதை
ஆட்சேபிக்க வேண்டும்போல் கிளர்ந்தேன்.
முழு வளர்ச்சியொன்றின் பூப்பையும் கனிவையும்
உள் உணர்ந்தவள்போல் பொங்கி நின்றேன்.
அற்புத மொன்றின் வெளிவிளக்கமோ என் உடல்?
ரசித்து ரசித்து மாளவில்லை.
உணர்ச்சிப் பெருக்கினால்
அழகழகான ஆடைகள் எண்ணற்றன உண்டாக்கிவிட்டேன்.
ஆடைகளின் விதங்கள் கூடின எனினும்
எந்த ஒரு ஆடையும் என் அழகைக் குறைத்து – விட
அனுமதிக்கவில்லை என் கவனம்.
சிக்கென உடையணிந்தேன்.
இப் பெண்ணுடல் அழகு
ஆணுடலை ஈர்க்கும் பொறியோ தந்திரமோ அல்ல!
தானே தனக்குள் நிறைந்த முழுமை.
பேரெழில், உன்னதப் படைப்பு.
கவனி:



செல்வி அம்ருதா

Happy International Women

## எனது டைரி



எனது டைரி எனக்கானதாய் இல்லை
எனது டைரி முகவரிகளை விழுங்கியபடி நெளிகிறது
எனது டைரிக்குள் உபதேசங்கள் அநேகம்
யாருக்கும் தொந்தரவற்றதாய் சின்னதாய்
ஒரு புலம்பல்
மனித துயரங்களின் தடாகத்திற்குள்
எனது துயரம் வந்துவிழ நான் என்ன செய்வது?
எனக்கான முகவரியை எனது டைரியில் காணோம்

- சுகந்தி சுப்பிரமணியன்.

பாலிலி இனப்பெருக்கம் செய்யும் ஒருயிரியாய்
மனிதன் படைக்கப்பட்டிருந்தால்
இன்றிருக்கும் ஒற்றை மானுடஉடல் எதுவாயிருக்கும்? சொல்.
"அள!" என்று நிமிர்ந்து நிற்கும் என் உடலை
நெருங்கி அளவெடுக்கக் கூசும் தையற்காரா!
வீதியில் போகும்போது
என்னை விநோதமாய் உறுத்துப் பார்க்கும் அசடே!
அச்சம் அசூயையினால் சிதைவுண்ட வேட்கையின்
கழிசல் பார்வைகளே!
எம் அழகையும் சிரிப்பையும்
விளம்பர சாதனமாக்கும் சாமர்த்தியங்களே!
இன்னும் கூர்ந்து பாருங்கள்.
உம்மை விலக்கி நடக்கிறது இவ் வுடல்
எத்தனை அழகுடன்! எத்தனை தீரத்துடன்!
எத்தனை கம்பீரத்துடன்! மற்றும்
எதனின் விளம்பரமாய்?

– தேவதேவன்

# அஃகம் சுருக்கேல் ஒளவியம் பேசேல்

நாஞ்சில் நாடன்




அகரம் முதல் ஒளகாரம் ஈறாகப் பன்னிரண்டு. பன்னி ரெண்டாவது எழுத்துக்கான ஒளவையாரின் ஆத்திச்சூடி, "ஒளவியம் பேசேல்". இதை வாசிக்கும் நீங்கள், இந்த இடத்தில் நின்று, ஒளவியம் பேசேல் எனும் தொடருக்குப் பொருள் யோசித்துப் பாருங்கள். உண்மையில், நம்மில் பலரைப்போல, எனக்கும் பொருள் தெரிந்திருக்கவில்லை.

ஆத்திசூடிக்கு, நாவலர் மு.வேங்கடசாமி நாட்டார் உரை விளக்கம் எடுத்துப் பார்த்தேன். ஒளவியம் - பொறாமை வார்த்தைகள் என எழுதப்பெற்றிருந்தது.

"எழுத்து எனப் படுவ
அகரம் முதல் னகரம் இறுவாய்
முப்ப..து என்ப"

என்பது தொல்காப்பிய நூற்பா. அதாவது எழுத்து எனப்படுவன, அகரம் தொடங்கி னகரம் ஈறாக முப்பது என்ப. தமிழில் உயிர் எழுத்துக்கள் 12, மெய் எழுத்துக்கள் 18, ஆக முப்பது. உயிரும் மெய்யும் புணர்ந்து, உயிர்மெய் 216 எழுத்துக்கள். ஆய்த எழுத்து எனப்படும் ஃ ஒன்று. எனவே, ஆக மொத்தம், தமிழ் எழுத்துகள் 247. இது பாலபாடம்.

மேலும், சில உச்சரிப்புகளைத் தமிழில் கொண்டுவருவதற்காக, ஏற்படுத்தப்பட்ட கிரந்த எழுத்துகள் க்,ஷ்,வ்,ஷ்,ஹ் எனும் ஐந்தும் பன்னிரு தமிழ் உயிருடன் புணர்ந்து, மொத்த கிரந்த எழுத்துகள் 65, அவற்றுடன் சிறப்பெழுத்து = சேர்ந்து ஆக 66. அரசியல் காரணங்களுக்காகவும் தூய தமிழ்க் காரணங்களுக்காகவும் இந்த எழுத்துகள் பாடத்திட்டத்தில் இருந்து இன்று நீக்கப்பட்டுவிட்டன. என் போன்ற மூத்த எழுத்தாளர்கள் மட்டுமே நஷ்டம், ஆஹா, ஜாங்கிரி, எஸ்ரா பவுண்ட், சுபஸ்ரீ, பஷி போன்ற சொற்களை அறிந்து வைத்திருக்கிறோம். இந்த கிரந்த எழுத்துகளைப் பயன்படுத்துவதா வேண்டாமா என்பது மொழி அரசியல். இராஜாஜி எனில் நமக்குக் கடுப்பு, இராசாசி என்றே அரசு ஆவணங்கள் சொல்லும். ஆனால் ஸ்டாலின் என்றால் உவப்பு, ,அது இசுடாலின் ஆகாது. இது நம் மொழி நேர்மை. ஆனால் கம்பன் தனது 10,368 பாடல்களில் எங்குமே இந்த எழுத்துகளைப் பயன்படுத்தவில்லை என்ற உண்மையை ஈண்டு குறித்துச் சொல்கிறேன்.

அது கிடக்கட்டும்.

கிரந்த எழுத்துகளின் பயன்பாட்டைப் பற்றி நாம் பேசும்போது, ஃ எனும் பாவப்பட்ட ஆய்த எழுத்தையும், ஒள எனும் இன்னொரு புறக்கணிக்கப்பட்ட எழுத்தையும் பற்றிப் பேச வேண்டும்.

"ஒளகார இறுவாய்ப்
பன்னீர் எழுத்தும் உயிர் என மொழிப"

என்கிறது, தொல்காப்பிய எழுத்ததிகார நூற்பா. அஃதாவது அ முதல் ஒள வரை பன்னிரண்டு எழுத்தும் உயிர் எழுத்துக்கள் என்பதாம்.

"ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஒள என்னும்
அப்பால் ஏழும்
ஈர் அளபு இசைக்கும் நெட்டெழுத்து என்ப"

என்பதும் தொல்காப்பியம் தான். அதாவது குறில் எழுத்துக்கள் ஒலிக்கும் காலம் ஒரு மாத்திரைக்காலம் எனில், நெட்டெழுத்துக்கள் இசைக்கும் காலம் இரண்டு மாத்திரைக் காலம் ஆகும். எனிமும் ஐ எனும் நெட்டெழுத்துப் போல, ஒள எனும் நெடிலும் இரண்டு மாத்திரை கால அளவில் ஒலிப்பதாயினும், சில சந்தர்ப்பங்களில் மட்டும் ஒலியளவில் குறுகி ஒரு மாத்திரை கால அளவிலும் ஒலிக்கலாம். அதாவது இந்த இரு நெடில்களும் குறில்களாகவும் பயன்படும். இதனை இலக்கணம் ஐ காரக் குறுக்கம், ஒள்காரக் குறுக்கம் என்கிறது. மேலும் ஐ எனும் எழுத்தும் ஒள எனும் எழுத்தும் செய்யுளின் இலக்கண அமைதிக்காகவும் இசை அமைதிக்காகவும் அளபெடுத்து வரும் போது இ மற்றும் உ எனும் குறில்கள் முறையே இசை நிறைக்கும். அளபெடை என்றால் தெரியும் தானே! செய்யுளில் ஒரு எழுத்து, இலக்கணத்தை நிறைவு செய்ய, இசையை நிறைவு செய்ய, அளபெடுத்து வருவது அளபெடை.

உறா அர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறா அம் வாழிய நெஞ்சே

எனும் 1200 குறளில் உறார் எனும் சொல்லும் செறார் எனும் சொல்லும் உறா அர், செறா அர் என்று அளபெடுக்கின்றன.

பாடலின் பொருள் - மனமே! நின்னொடு பொருந்தார்க்குத் தூது விட்டு, உற்ற நோயைச் சொல்ல நினைக்கின்றாய் அதனினும் நன்று நம்மை உறங்காமல் வருத்துகின்ற கடலைத் தூர்ப்பாய் ஆயின். (வ.உ.சி.)

மேலும் நெட்டெழுத்துக்களான ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஒள எனும் ஏழும், சொற்களாகவும் நின்று பொருள் தருவன. எடுத்துக்காட்டு, ஆ - பசு, ஈ - கொடு, ஊ - ஊன், ஏ - அம்பு, ஐ - தலைவன், ஓ - சென்று தங்குதல், மதகு தாங்கும் பலகை ஒள - உலகம், ஆனந்தம் என்மனார் புலவ.

இங்ஙனம் உயிர் எழுத்துக்களிலும், உயிர்மெய் எழுத்துக்களிலும் ஓர் எழுத்து ஒரு மொழியாகத் தமிழில் 42 உண்டு என்றும், 66 உண்டு என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். எடுத்துக்காட்டு - கை, பை, மை, கா, தீ, பீ, சே எனப் பற்பல.

(தொடரும்)



# பெண்

நேற்று
மலரென்றார் பெண்ணை
மதுவைச் சுவைப்பதற்கு.
மரமென்றார் பெண்ணை
விறகாய் எரிப்பதற்கு.
தெய்வக் கல்லென்று சொல்லி
சுத்தியலால் உடைத்தார்.
மென்மைப் புல்லென்று சொல்லி
மிதித்தார் சிலர்.
இன்று –
காற்றென்று சொல்லியும்
காண்பிக்கச் சொன்னால்
என்னனென்று சொல்வேன்
இம்மூடருக்கு?

– வைகைச்செல்வி –

# பாலை

உக்கிரமேறிய தனிமை
உலகை உருக்கும் வெம்மை
தங்கும் கருவீடு

வரங்களை மறுக்கும்
கொடுந் தவம்
தன்னை அழித்தே
எரியூட்டும் இருப்பு
ஆழி குடித்து
துளி நிரப்ப முடியா
அட்சய தாகம்

பாலை
அவள்
பெண் மட்டுமே

– எஸ். தேன்மொழி.–




# பெண்ணெனும் இரண்டாமினம்

"ஒரு பெண் பெண்ணாக இருப்பதென்பது தரத்தில் குறைபாடுடையவளாக அவள் இருப்பதைச் சார்ந்தது", சொன்னது அரிஸ்டோட்டில். "குறைகளுடன் உழலவே ஒரு பெண் இயற்கையில் படைக்கப் பட்டிருப்பதாகக் கருத வேண்டு"மென்றும் அவர் கூறுகிறார்.

அடுத்து, புனித தோமையார் அவர் பங்கிற்கு "பெண் என்பவள், குறைபாடுடைய ஓர் ஆண். அவள் படைப்பே ஓர் விபத்து, எதிர்பாராதது" என்கிறார். மனிதரினத் தோற்ற வரலாற்றின்படி ஏவாள், இழுத்து உருவாக்கப்பட்டவள். போஸ்வெ (Bossuer) சொற்களில் எழுதுவதெனில், "ஆதாமுடைய அதிகப்படியான எலும்பு ஒன்றினால்" படைக்கப்பட்டவள்.

ஆக மானுடம் என்பது ஆணுக்கானது. ஆணை விலக்கிவிட்டு பெண்ணில்லையென்பதும், அவள் பிறர்சார்ந்தே இயங்கப் பிறந்தவளென்றும் சொல்கிறார்கள்.

இன்றைக்கும் ஆணுக்கும் பெண்ணுக்கும் உலகில் சம உரிமை இல்லை என்பதுதான் உண்மை. அவளுடைய நிலமையில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிற போதிலும், இன்றைக்கும் அவள் பல விடயங்களில் வாய்ப்புகளின்றி




முடங்கிக்கிடக்கிறாள்.

எசமானன் ஆகிய ஆண், தனது அடிமை ஆகிய பெண்ணுக்கு வேண்டிய பொருட்களைத் தந்து அவளது உயிர்வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கிறான். இவ்வாழ்வாதாரத்தை நம்பி அவளும், தனக்குள்ள பொருளாதார அபாயத்திலிருந்தும், சுதந்திரமென்ற பேரில் அபௌதிக இன்னல்களுக்கான வீண் கனவுகளிலிருந்தும் விடுபட நினைக்கிறாள்.


ஓர் ஆணுக்கு, அவன் காரியம் யாவிலும் உளமார கேள்வியின்றி கைகொடுப்பதற்கு ஓர் கருவி தேவை. அதற்குப் பெண் பொருத்தமானவள் என்பது அவனது முடிவு. பெண்ணுக்கும் தான் கருவியாக இருப்பதில் பெரும்பாலும் மகிழ்ச்சி. ஏனெனில் அவளிடத்தில் தன்னை கர்த்தாவாக நிலைநிறுத்திக்கொள்ள வலிமையான ஆதாரங்களில்லை. தவிர பரஸ்பர எதிர்பார்ப்பற்ற துணையென்ற அனுபவமும் அத்தகைய நிலைப்பாட்டின் அவசியத்தை அவளுக்கு உணர்த்தி இருக்கிறது.

இதுவரை ஆண்களுக்கான உலகமாக இருந்து இன்றைக்கு மாற்றத்திற்கு உட்படுகிறதென்பது எப்படி? இந்த மாற்றத்தினால் நன்மைகள் ஏதேனும் உண்டா? வருங்கால உலகம் ஆண்களுக்கு மட்டுமல்ல. பெண்களுக்கும் உரியது என்கிற நிலை வருமா?

– சிமோன் தெ பொவார் –

**மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு**

# வருவாயைத் திரட்டும் நிறுவனங்கள் மறுதுருவத்தில் மக்களின் வாழ்வியற் தேவைகளையும் நிறைவு செய்ய வேண்டும்



இணையத்தள வசதிகள் பிர மாண்டமாக வளர்ந்து பலதையும் பத்தையும் மக்கள் உடனுக்குடன் தெரிந்து வரும் இக்காலகட்டத் தில் யாழ். நகரை அண்டிய பிரதேசமாக இருந்தும் கூட மண்டைதீவில் இணையத்தள வலையமைப்பு இல்லையாம் இது தொடர்பாக அம்மக்கள் குறித்த நிறுவனங்களிற்கு பலமுறைப்பாடுகள் செய்தும் கூட வருவாயினை மாத்திரம் கொள்கின்றன அரசியல் அழுத்தங்களின் மத்தியில் மண் டைதீவு இராணுவமுகாமிற்கு வலையமைப்பை சீர்செய்து கொடுத்த இந்நிறுவனங்கள் செல்வாக்கற்ற அப்பாவி மக்களிற்கு அநீதியிழைக்கின்றன இது தொடர்பாக குறித்த நிறு வனங்களும் இதனோடு தொடர்பு பட்ட அரச அரசசார்பற்ற நிறு வனங்களும் சிந்தித்து செயற் படவேண்டும். அங்கு கல்விகற்கும் பல மாணவர்கள் தமது கல்வித்தேவைக்காக இணையத்தளத்தைப் பயன்படுத்த நிற்பது இணையத்தள வசதிகளே நகரப்புறங்களில் இருந்து பல மைல் தூரத்தில் உள்ள சில உட்கிராமங்களிற்குக் கூட இணையத்தள வசதிகள் உண்டு இவ்வாறிருக்கும் போது அண்ணளவாக 3 கிலோ மீற்றர் இடைத்தூரத்தில் உள்ள மண்டைதீவிற்கு இவ்வலையமைப்பு இல்லாமையானது மிகப்பெரியகுறைபாடாகும்

கருத்திற் கொண்ட அந்நிறு வனங்கள். வருவாய்க்கு மீறிய செலவாணியாக அது அமையு மென்பதனால் இதனைச் சீர் செய்ய எவரும் முன்வரவில்லை பிற பிரதேசங்களில் வருவாயை மிதமிஞ்சித்திரட்டும் இந்நிறு வனங்கள் இதனைக் குறைந்த வருவாயுடன் மக்கள் நலன்கருதி செய்வதே கட்டாய தேவை யாகும். ஆனால் இதற்கு மாறாக இந் நிறுவனங்கள் நடந்து முடியாத சூழலில் பல அரச ஊழியர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் உள்ளனர். இவர்கள் தொடர்பாக எந்த அக்கறையுமற்ற நிலையில் இந்நிறுவனங்கள் செயற்படுவது மிக வேதனையினைத் தரு கின்றது. இன்று தகவல்களை உடனுக்குடன் சேர்த்து பலவாறு போராட வேண்டிய ஓர் அறிவியல் யுகம் உருவாகி யுள்ளது. இதில் பெரும்துணை

**தீர்வுக்கு என்ன வழி**

மக்கள் சேவைக்காக உருவாக்கப்பட்ட கிராமசேவை யாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் அரசாங்க அதிபர் ஊடாக இம்மக்களிற்கான இணையத்தள வசதியை பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும். இது ஓர் துருவத்தில் மனிதஉரிமை மீறல் செயற்பாடே அனைவரிற்கும் சமவாய்ப்பு என்கின்ற எண்ணக்கரு இங்கு புறக்கணிக்கப்படுகின்றது உதாரணமாக இலங்கைப்போக்குவரத்து சபையினால் சேவையில் ஈடுபடுத்தப்படும் பேருந்துகள் அனைத்தினாலும் இலாபம் ஈட்டப்படாது ஒரு சிலவற்றால் நட்டம் ஏற்படும். இருந்து அந்த நட்டத்தை வேறு இலாபபிரதேச போக்குவரத்தில் நிவர்த்தி செய்து கொண்டு மக்கள் சேவையினை பரவலாக்குகின்றனர். இது போற்றக்கூடிய அம்சம். இவ்வாறு ஏன் இந்நிறுவனங்கள் செயற்பட முடியாது என்பது தான் இம்மக்களின் கோரிக்கையாக மக்கள் முரசு முன்வைக்கின்றது.




## 76

**அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.**

**பின்வரும் நுண்மதிக் கணக்குகளைத் தீர்த்து உமது விடை எழுதுக.**

1. பிரசாந் உமாகாந்தனிலும் உயர்ந்தவன். பிரசாந் கபில்தேவிலும் உயர்ந்தவன். அமர்நாத் உமாகாந்திலும் உயர்ந்தவன். ஆனால் கபில்தேவிலும் கட்டையானவன். இவர்களுள் மிகவும் கட்டையானவர் யார்?

2. ஒரு கடையில் அங்கர் டின்கள் ஒரு வரிசையில் 7 உம், அடுத்த வரிசையில் 6 உம் என்ற ஒழுங்கில மேல் வரிசையில் ஒரு டின் வரும்வரை அடுக்கப்பட்டிருந்தது. கீழ், வரிசையில் 9 டின்கள் இருப்பின் மொத்த டின்கள் எத்தனை?

3. பிரதான வீதியின் இடது புறத்தில் அஜந்தா மாளிகை உள்ளது. எதிர்ப்புறத்தில் அவரது வீடு உள்ளது. வீட்டிலிருந்து வெளிப்பட்டதும் இடது புறத்தில் சூரியன் உதித்தால் மாளிகை வாசல் எத்தசையை நோக்கி உள்ளது?

4. ரூபா 39,00 = 1 ஸ்டேலிங். 1 டொலர் = 1 ஸ்டேர்லிங் எனவும் நாணய மாற்றுவீதம் அமைந்துள்ளது. 39 டொலருக்கு எத்தனை ரூபா பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்ய முடியும்?

5. வவுனியாவிலிருந்து ஓமந்தைவரை பேருந்திலும், ஓமந்தையிலிருந்து நாம்பன்குளம் வரை சைக்கிளிலும் சென்ற அதிகாரி மிகுதி 2 கிலோ மீற்றர் தூரத்தை நடந்து சென்றதன் பின்னர், இதன் 1 1/2 மடங்கை சைக்கிளிலும், சைக்கிள் தூரத்தின் மூன்று மடங்கை பஸ்ஸிலும் சென்றதாகக் கணக்கிட்டார். பயணத்தின் முழுத்தூரம் என்ன?

6. 20,000 ரூபாவினை வருடத்தில் 14.4% வட்டிக்கு முதலீடு செய்து வட்டி பெறும் ஒருவர் வருடம் 720 ரூபாவினை மீளச் சேமிப்பதற்கு அவரது வருமானத்தில் மாதம் என்ன வீதத்தைச் சேமிக்க வேண்டும்?

7. ஒரு சாக்கு தோடம்பழத்தில் 1 ஆம் நாள் அரைவாசியும், 2 ஆம் நாள் 1 ஆம் நாள் விற்பனையின் அரைவாசியும் 3 ஆம் நாள், 2 ஆம் நாள் விற்பனையின் பாதியும் விற்பனை செய்யப்பட்டது. 4 ஆம் நாள் மீதி இருந்த பழங்களில் 3'.4 பங்கு விற்பனை செய்யப்பட்டது. எஞ்சியவை 15 பழங்களாயின் சாக்கிலிருந்த மொத்தப் பழங்கள் எவ்வளவு?

### நுண்ணறிவு

கிழே தரப்பட்ட கணக்குகள் ஒவ்வொன்றிலும் கிடையாகவும் நிரையாகவும் உள்ள கூட்டல்களில் முறையே ஒவ்வொரு பிழை உள்ளது. கணக்கி லுள்ள ஒரு இலக்கத்தை மாற்றி எழுதுவதன் மூலம் இப்பிழைகள் இரண்டையும் திருத்தலாம். பிழையான இலக்கங்களை வட்டமிட்டுக் காட்டுவதோடு சரியான இலக்கத்தையும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 3 | 9 | 3 | 19 |
| 2 | 5 | 1 | 8 |
| 3 | 7 | 8 | 18 |
| 8 | 21 | 16 | 45 |

| | | | |
|---|---|---|---|
| 8 | 7 | 9 | 24 |
| 3 | 1 | 2 | 10 |
| 8 | 1 | 8 | 17 |
| 19 | 13 | 19 | 51 |

| | | | |
|---|---|---|---|
| 15 | 17 | 5 | 24 |
| 8 | 9 | 12 | 10 |
| 85 | 79 | 37 | 201 |
| 108 | 109 | 54 | 271 |


| | | | |
|---|---|---|---|
| 9.7 | 3.8 | 8.5 | 22.0 |
| 18.6 | 17.5 | 4.5 | 42.6 |
| 7.8 | 12.3 | 15.7 | 35.8 |
| 36.1 | 33.6 | 30.7 | 100.4 |

**அனுப்பவேண்டிய முகவரி**
புதிர்ப்போட்டி
இல: ..........
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

### விண்ணப்பதாரரின் விபரம்

முழுப்பெயர் :- ..........................................
பாடசாலை :- ..........................................
கல்வி கற்கும் தரம் :- ..........................................
வீட்டு முகவரி :- ..........................................
தொலைபேசி இலக்கம் :- ..........................................

# "ஈர நிலங்களும் விவசாயமும்"
# பேச்சுப்போட்டி பரிசளிப்பு நிகழ்வு



கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினால் உலக ஈரநில தினத்தை முன்னிட்டு 'ஈரநிலங்களும், விவசாயமும்' என்ற தலைப்பில் பேச்சுப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு கிளிநொச்சி புனித திரேசாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலர் திருமதி தமிழ்ச் செல்வி அமலராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட 2 மாணவர்கள் வீதம் 8 மாணவர்கள் போட்டியில் பங்கு பற்றியுள்ளனர்.

கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரி அதிபர் திருமதி.ஜெ.தனபாலசிங்கம் இந் நிகழ்வில் கலந்து கொண்டார்.

ஈரநிலங்களும் விவசாயமும் என்ற தலைப்பிலான இப் பேச்சுப் போட்டியில் முதலாமிடத்தை பளை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையைச சேர்ந்த உ.துவாரகன் பெற்றுக் கொண்டார். இரண்டாமிடத்தை கிளி. முருகானந்தா கல்லூரியைச் சேர்ந்த வி.பிரித்திகா பெற்றுக் கொண்டார்.

மூன்றாமிடத்தை கிளி.புனித திரேசா மகளிர் கல்லூரி மாணவி து.சங்கவி, கிளி.முழங்காவில் மகா வித்தியாலய மாணவி ந.நர்மதா ஆகியோர் இணையாகப் பெற்றுக் கொண்டனர். கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் கடமையாற்றும் சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.வசந்தன் ஈரநிலங்களும் விவசாயமும் என்ற தலைப்பில் மாணவர்களுக்கு விரிவுரைகளை வழங்கினார்

அதனைத் தொடர்ந்து நன்றியுரையை முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவின் சுற்றாடல் உத்தியோகத்தர் எஸ்.விஜயதர்சன் நிகழ்த்தினார். (90)

# கைவிரல் பதிவு இயந்திரம் பாடசாலையில் பொருத்த ஏற்பாடு

(வேலணை)

தீவகத்தில் உள்ள சில ஆரம்பப் பாடசாலைகளில் உத்தியோகத்தர்களின் வருகையை பதிவு செய்யும் கைவிரல் இயந்திரம் பொருத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆரம்பப் பாடசாலைகளில் இந்த இயந்திர சாதனங்களைப் பொருத்துவதன் மூலம் பாடசாலைகளில் கடமையாற்றி வருகின்ற அனைத்து உத்தியோகத்தர்களின் மேலதிக வரவினையும் உரிய நேரங்களையும் அறிந்து கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரங்களினது முதல்கட்ட செயற்பாடுகள் வேலணை, நெடுந்தீவு காரைநகா ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளில் பொருத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## சமூக பாதுகாப்பு கொடுப்பனவு

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி சமுர்த்திவங்கிச் சங்க எல்லைக்குட்பட்ட அம்பாள் நகர் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்திப் பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்பு கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இதனடிப்படையில் அம்பாள் நகர் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட இரு பயனாளிகளுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் சமூகபாதுகாப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளது (69)

## கசிப்பு வைத்திருந்த 3பேர் ஆட்பிணையில் விடுதலை

கிளிநொச்சி, பளைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தும் கோடாவினை வைத்திருந்த இருவரை தலா 125,000 ரூபா ஆட்பிணையிலும், உற்பத்தி செய்யும் உபகரணத்தினை வைத்திருந்த மேலும் ஒருவருக்கு 100,000 ரூபா ஆட்பிணையிலும் செல்ல கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வகாப்தீன் உத்தரவிட்டார்.

கிளிநொச்சி - பளைப்பகுதியில் 2015 மில்லிலீற்றர், 1960 மில்லிலீற்றர் கோடாவினை வைத்திருந்த இருவரும், கசிப்பு உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் உபகரணத்தினை வைத்திருந்த ஒருவரும் கடந்த வாரம் பளை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.


தொடர்ந்து, மேற்படி நபர்களை கடந்த புதன்கிழமை கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போதே நீதவான் மேற்படி உத்தரவினை விதித்தார். (170)

## முன்பள்ளிகளின் தரத்தை மேம்படுத்த நடவடிக்கை

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் முன்பள்ளிகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு பிரதேசசெயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் நடவடிக்கை எடுத்துள்ளார். இது தொடர்பான கணக்கெடுப்பு தற்போது நடைபெற்று வருவதாகவும் தெரியவந்துள்ளது.

பிரதேசசெயலரின் பணிப்பின் பேரில் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் செல்வி ஜெயந்தினி மகேந்திரன் இக் கணக்கெடுப்பை கிராம அலுவலர்களின் ஒத்துழைப்பைப் பெற்று செய்து வருகின்றார்.

முன்பள்ளிகளின் பெயர், கற்பிக்கும் ஆசிரியர்களின் பெயர், மாணவர்களின் பெயர், பிறந்த திக்தி போன்ற விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தென்மராட்சி கல்வி வலய பாடசாலை ஆசிரியர்களிடையே வலய சைவசமயபாடப்பிரிவினரால் நடாத்தப்பட்ட வில்லுப்பாட்டுப்போட்டியின் ஒரு காட்சியைக் காணலாம். (11)

# வாரம் ஒரு காரம்

## அரசுக்களின் அரங்கில் அரசியல் துரோகம் என்றுமே இடம் பெறாது!

**எதிர்பார்ப்புக்களைச் சுமந்த அப்பாவி மக்கள் "பாவிகள்" சுமக்க வைத்த ஊடகங்கள் "படுபாவிகள்"**

வாரமொரு காரம் இன்று நடந்து கொண்டிருப்பதை அன்று தெளிவாக சொன்னது. அரசுக்களின் அரங்கில் அரசியல் துரோகம் என்றுமே இடம்பெறாது. இதுதான் யதார்த்தம், இதுதான் அரசியல். பிழையோ சரியோ சிறுபான்மை மக்களிற்காக ஓர் நாட்டின் அரசியல் இறைமைக்குள் தலையிட எந்த நாடும் முன்வராது.

ஏனெனில் எந்த நாட்டிலும் துரோகங்கள் மலிந்த விடயமே அரசியல். சுட்டுவிரல் உன்னைக் காட்ட மற்றவிரல்கள் என்னைக் காட்டும். அதனால் மனித உரிமைகள் என்கின்ற பெயரில் மறுப்புக்களை வெளியிடுமே தவிர மாற்று நடவடிக்கைக்கு எந்த ஓர் நாடும் இறங்க மாட்டாது.

தீர்வு தீர்வு என்று தீர்க்கமான சிந்தனைகள் இல்லாமல் மக்களைத் திசைமுகப்படுத்தியது தான் கண்ட மிச்சமாச்சு. இன்று ஜெனிவாவில் நடந்த தவறுக்கு யார் காரணம்? அன்று ஜெனிவாவில் நடந்த தவறுக்கு யார் காரணம்? என்பதற்கப்பால் ஒவ்வொரு தவறிலும் பாதிக்கப்படுவது மக்கள் என்பதை மக்களே புரிந்து கொள்ள வேண்டும்.

ஜெனிவாப் பிரேரணையின் சாராம்சம் இன்று எதைச் சொல்கின்றது, சர்வதேச விசாரணை இல்லை என்பதையும் உள்ளக பொறிமுறைக்கு வழிவகைகளை இலங்கையரசு மேற்கொள்ள வேண்டும் என்பதையுமே. இந்தப் பதில்தான் சர்வதேச அரங்கில் கிடைக்குமென்றால் இதை நம்பி நாம் இலங்கையரசுடன் முட்டி மோதிக்கொண்டமை எவ்வளவு முட்டாள்தனம் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

இலங்கையில் சிறுபான்மைத் தமிழர்களிற்கெதிராக பல மனித உரிமைமீறல்கள் இடம்பெற்றமை உண்மைதான். அதற்கு நியாயம் கேட்டு இனிவரும் உறவுகளையும் விரிசலடையச் செய்வதில் என்ன பயன்? இதுதான் நாம் முன்வைக்கும் கேள்வி.

குற்றங்கள் குறைகள் என்று போராடிப் போராடி எத்தனை உயிர்களைப் பலிகொடுத்திருப்போம், எத்தனை ஆண்டு அபிவிருத்திகளை வீணடித்து இருப்போம். ஏதாவது நடந்ததா? பின்பும் ஏன் எதிர்க்கோசம்?

கோரப்படும் நியாயம் நீதி கிடைத்ததா? இல்லையானால் மீண்டும் மீண்டும் ஏன் அக்கோரிக்கை முன்வைப்புகள்? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் வாதிகள் தாம் வாழ்வதற்கான அரசியலை நடாத்துகின்றார்கள். அவர்களிற்கு தீர்வுகள் இல்லாத தீர்க்கமற்ற அரசியல் சிந்தனைகள் தான் தேவை. இது இல்லாவிட்டால் அவர்களால் அரசியல் நடாத்த முடியாது.

ஆகவே அரசியல் வாதிகளின் கதைகளை ஒருபுறம் வைத்து விட்டு நடந்து முடிந்த நடந்து கொண்டிருக்கின்ற அரசியல் அனுபவங்களையேனும் கருத்தில் எடுத்து மக்கள் தமக்குரிய அரசியல் சிந்தனைகளை தாமே அமைத்துக்கொள்ள வேண்டும்.

ஜெனிவாவில் இடம்பெறும் கூட்டத்தொடரில் முன்வைக்கப்பட்ட பிரேரணைகளை மக்கள் முதற்கண் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். வடக்கில் இறுதியுத்தம் தொடர்பாக இழைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணைக்கு உடனடியான பரிந்துரை எதனையும் ஜெனிவாப் பிரேரணை வலியுறுத்தவில்லை. அதேவேளை உள்ளக விசாரணைப் பொறிமுறை ஒன்றை ஐ.நா. வின் கண்காணிப்புடன் மேற்படி பிரேரணை பரிந்துரைந்துள்ளது.

இது ஒருபுறமிருக்க தேர்தல் தொடர்பான தமிழக முதல்வரின் விஞ்ஞாபன அறிக்கையில் முதலாம் தவறு இரண்டாம் தவறு என பல தவறுகளைப் பட்டியலிட்டு இந்திய மத்திய அரசைச் சாடிய செல்வி ஜெயலலிதா இலங்கைத்தமிழ் மக்களிற்காக தேர்தல்கண்ணீர் வடித்துள்ளார். ஆனால் பிரதமர் மன்மோகன் சிங் மியன்மாரில் நடைபெற்ற உச்சிமாநாட்டின் போது பிரத்தியேமாக பலமணிநேரம் மகிந்த ராஜபக்சவை சந்தித்து உரையாடியுள்ளார். இதை எவராலும் தடுக்கமுடிந்ததா?

அரசியல் உறவுகளுக்கு அப்பால் இருக்கும் போது மக்களின் கற்பனைக் கோட்டைகளை ஊடகங்கள பிரமாண்டமாக கட்டுவிக்கின்றன. இதனை தெளிவாக சட்டத்துறை விரிவுரையாளர் குருபரன் எடுத்தியம்பியுள்ளார். சூடாநாட்டில் சில ஊடகங்கள் பொய்யான நம்பிக்கைகளை ஊட்டி, ஆசை காட்டி மக்களை மோசம் செய்கின்றன என்று அவர் கூறியுள்ளார்.

எது எப்படி இருப்பினும், இது இப்படி இப்படித்தான் நடக்கும் என்பதை எப்போது மக்கள் புரிந்து கொள்கின்றார்களோ அன்றுதான் எப்படித் தீர்வினை அணுக வேண்டும் என்பது மக்களிற்குப் புரியும்.

**- வெண்கட்டியன்**

# மீன்பிடியின் பொருளாதார மையம் வடமாகாணம் என்கிறார் ராஜித



(வவுனியா)

மீன்பிடித்துறையில் பொருளாதார மையமாக வடமாகாணம் காணப்படுகிறது. யுத்தம் இடம்பெறுவதற்கு முன்னர் 1980 களில் இந்நாட்டின் தேசிய மீன் உற்பத்தியில் 47 சதவீதத்தை வடமாகாணமும் 27 சதவீதத்தை கிழக்கு மாகாணமும் பெற்றுக்கொடுத்தது.

யுத்த காலத்தில் வடமாகாணத்தில் 07 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்த மீன்பிடித்துறையை தற்போது 15 சதவீதமாக அதிகரித்துள்ளதாக மீன்பிடி மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்தன தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் 20 நன்னீர் மீன்பிடியாளர்களுக்கு நேற்று முன்தினம் வள்ளங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

"இந்நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தால் வடமாகாணம் பாதிக்கப்பட்டிருந்தமையால் எனது அமைச்சினூடாக கூடுதலான நிதியை இங்கு வழங்கியிருக்கிறோம்.

வவுனியாவில் நன்னீர் மீன்பிடி மாத்திரமே காணப்படுகிறது. எனினும், வடபகுதியான யாழ்பபாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு எங்களுடைய பிரதேசங்களுக்கு வழங்கப்படும் நிதியை விட கூடுதலான நிதி வழங்கப்படுகிறது. இதனூடாக அபிவிருத்தி முன்னெடுக்கப்படுகிறது.


யுத்த காலத்தில் வடமாகாணத்தில் 07 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்த மீன்பிடித்துறையை தற்போது 15 சதவீதமாக அதிகரித்துள்ளோம். அவ்வாறே கிழக்கு மாகாணமும் 15 சதவீதத்திலிருந்து தற்போது 23 சதவீதமான வளர்ச்சியைக் கண்டுள்ளது.

தற்போது எமக்கு தேவையாகவுள்ளது வடமாகாணத்தின் கரையோரத்திற்கு தேவையான இறங்குதுறைகள், நங்கூரமிடும் தளங்கள், மீன்பிடித்துறைமுகங்களாகும். இவைகளை அமைத்து வடமாகாணத்திலிருந்து மாத்திரம் மீன் உற்பத்தியை 50 சதவீதத்தால் அதிகரிக்க வேண்டுமென்பதேயாகும். அவ்வாறே நன்னீர் மீன்பிடியையும் அதிகரிக்க வேண்டும்.

வடமாகாண தேர்தல் மூலம் மீன்பிடி அமைச்சர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருடன் இணைந்து எதிர்காலத்தில் பல அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கிறேன். அவ்வாறே இன்று உங்களுக்கு முதலமைச்சராக தெரிவுசெய்யப்பட்டுள்ள சி.வி.விக்கினேஸ்வரன் எனது நீண்டகால நண்பராவார். அவர் மூலமாகவும் எதிர்காலத்தில் இங்கு பல பிரச்சினைகள் தீர்க்கபபடலாமென்ற எண்ணம் எனக்குள்ளது.

வடமாகாண முதலமைச்சர் தென்பகுதியில் நீண்டகாலம் வாழ்ந்தமையால், பெரும்பான்மையின மக்களின் எண்ணங்களை நன்கறிந்திருக்கக் கூடியவர். அவருக்கு பெரும்பான் மையின மக்களுடன் இணைந்து இந்நாட்டில் இருக்கக்கூடிய பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய வல்லமையுண்டு. எதிர்காலத்தில் இது சாத்தியமாகும் என எதிர்பார்க்கின்றேன்" என்றார்.

# நள்ளிரவில் பஸ்நிலையத்தில் காத்திருந்த மாணவிகள் கைது



கொழும்பிலுள்ள பிரசித்தி பெற்ற பாடசாலையொன்றைச் சேர்ந்த மாணவிகள் இருவர், மஹரகம பஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் அதிகாலை 2 மணியளவில் நின்றிருந்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மாணவிகளிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் பிறந்தநாள் விழாவொன்றில் கலந்துகொண்டுவிட்டு வீடு திரும்புவதற்காக பஸ் நிலையத்துக்கு வந்ததாகவும் பஸ்ஸொன்று வரும் வரை காத்திருப்பதாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இவ்விருவரும் அணிந்திருந்த ஆடைகள் பொலிஸாருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியதைத் தொடர்ந்தே குறித்த இரு மாணவிகளையும் கைது செய்ததாக குறிப்பிட்ட மஹரகம பொலிஸார் கைது செய்யப்பட்ட மாணவிகளிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருவரில் ஒருவர் இராணுவத்தில் உயர் பதவிநிலை வகிக்கும் அதிகாரி ஒருவரின் மகள் எனத் தெரிய வந்துள்ளது எனத் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவ்விரு மாணவிகளது பெற்றோரையும் வரவழைத்து மாணவிகளை அவர்களிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# விபசார விடுதியின் பெயர் ஆயுர்வேத மத்திய நிலையம்

(கொழும்பு)

வெள்ளவத்தை பொலிஸ் பிரிவில் டபிள்யு.ஏ. சில்வா மாவத்தைப் பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் விபசார விடுதி ஒன்று முற்றுகையிடப்பட்டுள்ளது.

ஆயுர்வேத மத்திய நிலையம் என்ற பெயரில் இந்த விபசார விடுதி இயங்கி வந்துள்ளதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

புதுக்கடை இலக்கம் 3 நீதவான் வழங்கிய அனுமதியை அடுத்து வெள்ளவத்தை பொலிஸ்ார் நேற்று முன்தினம் இரவு 08 மணியளவில் குறித்த சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது பாலியல் தொழிலுக்குத் தயார் நிலையில் இருந்த இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டனர்.

ஹங்வெல்ல மற்றும் வத்தளை பகுதிகளைச் சேர்ந்த 28, 38 வயதுடைய பெண்களே கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழ்ப்பாண பொறியியலாளர் வெள்ளவத்தையில் தற்கொலை

(கொழும்பு)

வெள்ளவத்தைப் பிரதேசத்தில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

எனது மரணத்திற்கு எவரும் காரணமில்லை. நான் தற்கொலை செய்து கொள்கின்றேன் என கடிதம் எழுதி வைத்து குறித்த இளம் பொறியியலாளர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 26 வயதான ராஜ்பிரதீபன் என்ற பொறியியலாளரே தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

வெள்ளவத்தை மல்லிகா ஒழுங்கையில் அமைந்துள்ள வீடு ஒன்றில் தற்காலிகமாக தங்கியிருந்த இளைஞரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

காதல் தோல்வியே இந்த மரணத்திற்கான காரணம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

வெள்ளவத்தை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# மன்னார் மனிதப் புதைகுழி மயானமென கண்டுபிடிப்பு

## கூறுகின்றது தொல்பொருள் திணைக்களம்

(கொழும்பு)

மன்னாரில் அண்மையில் மனித எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்ட இடம் ஓர் மயானம் என தொல்பொருள் திணைக்களம் அறிவித்துள்ளது. இரண்டு மாதங்களுக்கு முன்னதாக மன்னாரில் பாரிய மனிதப் புதைகுழியொன்று கண்டு பிடிக்கப்பட்டது. இந்த மனிதப் புதைகுழியிலிருந்து 80 பேரின் மனித உடற்பாகங்கள் மீட்கப்பட்டிருந்தன.இந்த சடலங்கள் புதைக்கப்பட்ட இடமானது பாரிய மனிதப் புதைகுழி அல்ல எனவும் அந்த இடம் ஓர் மயானம் எனவும் தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.



சடலங்கள் புதைக்கப்பட்டிருந்த அமைப்பு மற்றும் மண்ணின் கட்டமைப்பு ஆகியவற்றை கருத்திற் கொள்ளும் போது இது ஓர் மயானமாக இருந்திருக்க வேண்டுமென சுட்டிக்காட்டியுள்ளது.இந்தக் காலப்பகுதியில் பெட்டிகளில் இட்டு சடலங்கள் புதைக்கப்பட்டிருக்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அநேகமான சடலங்கள் 50 ஆண்டுகளுக்கு முன்னர் புதைக்கப்பட்டவை எனவும், சிலவே 100 ஆண்டுகளுக்கு முன்னர் புதைக்கப்பட்டவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1936-1938ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டின் சில பகுதியில் நிலவிய மலேரியாக்காய்ச்சல் காரணமாக உயிரிழந்தவர்களின் சடலங்களாகவும் இவை இருக்கக் கூடுமென சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது,எனினும், இந்த மனித உடற்பாகங்கள் தொடர்பில் தீர்க்கமான முடிவுகளை தற்போதைக்கு வெளியிட முடியாது என தொல்பொருள் ஆரய்ச்சித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மண்டை ஓடுகள் மற்றும் எலும்புக் கூடுகள் தொடர்பில் மேலதிக விசாரணை நடாத்தியதன் பின்னரே சரியான தகவல்களை வெளியிட முடியும் என குறிப்பிட்டுள்ளது.

# யாழ்.உட்பட 9 மாவட்டத்தில் டெங்கு நோய் அபாயம்

யாழ். மாவட்டம் உள்ளிட்ட ஒன்பது மாவட்டங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக இம் மாவட்டங்களில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது தெரிய வந்துள்ளதாக டெங்கு நோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், கம்பஹா கொழும்பு, களுத்துறை, குருநாகல் புத்தளம், கண்டி, கேகாலை இரத்தினபுரி, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களிலேயே டெங்கு நோய் பரவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகளவில் காணப்படுவதாகவும் எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் தென் கிழக்கு பருவப் பெயர்ச்சி மழைக்காலம் ஆரம்பிக்கும் நிலையில் இம் மாவட்டங்களில் இந்நோய் பரவும் அபாயம் ஏற்பட்டிருப்பதால் இதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் டெங்கு நோய்த தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் ஹசித் திசேரா குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு டெங்கு நோயினால் 32060 பேர் பாதிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்த அவர் கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் 4138 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# திருமலை மாணவர்கள் கொலை வழக்கு மீளவும் ஒத்திவைப்பு

(திருகோணமலை)

திருமலை மாணவர் படுகொலை வழக்கு மீளவும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை காந்தி சுற்றுவட்டப்பகுதியில் 1996 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி நடந்த 5 மாணவர்களின் கொலை தொடரபான வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

திருகோணமலை பிரதான நீதவான் ஈ.சரவணராஜா முன்னிலையில், வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, முதலாம், ஏழாம் மற்றும் 13ஆவது சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பதால், அவர்களுக்கு பிடிவிறாந்தை பிறப்பிக்குமாறு பாதிக்கப்பட்ட தரப்பின் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி, நீதவானிடம் கோரிக்கை விடுத்தார்.

சந்தேகநபர்கள் பயணம் செய்த வாகனத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக அவர்கள் உரிய நேரத்தில் நீதிமன்றத்தில் ஆஜராக முடியாது போனதாக அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கூறினார்.

இதனை கவனத்தில் எடுத்துக் கொண்ட நீதவான், தாமதத்திற்கான காரணத்தை மனு ஒன்றின் மூலமாக நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்துமாறு உத்தரவிட்டார்.

இதனையடுத்து வழக்கு விசாரணைகளை ஏப்ரல் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதவான், அன்றைய தினம் சாட்சியாளர்களை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தவிட்டார்.

# க.பொ.த சா/த, உ/த மாணவர்களுக்கான விசேட ஆங்கில பயிற்சி

**(Last wenesday continue...)**

**Test - 10**

Fill in the gaps. Use the words in the box. First one is done for you.

| | | |
|---|---|---|
| Nationality | Name | Address |
| Age | Occupation | Sex |
| Marital status | Habbies | Date of birth |
| Religion | Qualification | |

1. Name :- Sinnathural
2. --------------- :- married
3. --------------- :- Male
4. --------------- :- 27.10.1983
5. --------------- :- G.C.E (A/L)
6. --------------- :- Sri Lanka
7. --------------- :- 25 Years
8. --------------- :- typist
9. --------------- :- gardening and reading
10. --------------- :- Hindu
11. --------------- :- Madduvil East, Madduvil

**Test - 11**

Phrases and words in column B relate to the words in column A match them correctly.

| | A | B |
|---|---|---|
| a) | Tailor | farming |
| b) | Florist | medicine |
| c) | Farmer | flowers |
| d) | Jeweler | a mine |
| e) | Miner | loom |
| f) | Peddler | jewels |
| g) | Artist | tea leaves |
| h) | Potter | craft a fine art |
| i) | Doctor | vessels |
| j) | Tea plucker | clothes |
| k) | Weaver | fish |
| L) | Fisherman | sale in a pack |

**Test - 12**

Your friend has invited your family for dinner next Sunday. But you are unable to go there. Explain the reasons to your friend through letter. (Use about 50 words)

---------------------------------------------------------------------

---------------------------------------------------------------------

**Test - 13**

Read the paragraph and answer the questions given bellow.

FLORENCE NIGHTINGALE

A Famous person whom I admire most is Florence Nightingale was born in a wealthy Victorian family, in England. Florence wanted to do something useful. Florence did not like to be dressed up in fine clothes, teken in carriages and waited upon all time by servants.

Florence played with her dolls imagining that they were sick and she nursed them all. Her mother and her sister were interested in social work. Her father was sad because Florence took up nursing.

In those days hospitals were not clean and the nurses were not kind to patients. So her mother didn't give permission to Florence to be a nurse but Florence naturally persuaded her mother.

When the Crimean war broke out hundreds of soldiers were wounded. Many died because there no kind nurses. Florence took thirty five nurses, cleaned the hospitals and helped the soldiers to get well.

In the nights Florence took her lamp and visited rows of soldiers. She was kind. She cared the soldiers to get them well. Soldiers loved her. After this hospitals became clean and nursing was established as a noble profession. She was called he hady with a lamp.

1. What is the name of the famous lady?
2. Where was she born?
3. What kind behaviour didn't she like?
4. Why was her father sad?
5. What did she do to the injured soldiers?
6. At last, how was she called?

**Test 14**

Complete the dialogue with suitable words/ phrases form the box.

Suguna :- Hello, I am Suguna

Maju :- Hello, I am Maju. I am (1) ------------ Girls' High School Kandy.

Suguna :- I am from Silva Vidyalaya, Galle. you a (2) -------------- of the science society?

Maju :- Yes, I'm the secretaty (3) ----------------- why I am invited.

Suguna :- I'm a member of the sung Nature Club. we got the (4) ------------------ today because our nature won the (5) -----------------

Maju :- A girl in our school has won third place in the science essay (6) ------------------

Suguna :- They are (7) ------------------- start the ceremony

Maju :- Don't (8) ------------------- you have to sit (9) ------------- (9) ------------------- to the number given let's keep in (10) --------------------

| | | | |
|---|---|---|---|
| 1) touch | 2) from | 3) according | 4) going to |
| 5) competition | 6) that's | 7) member | 8) prize |
| 9) first place | 10) forget | | |

**Test 14**

Read the fllowing letter and answer the questions given below.

The British College,
Colombo,
3rd October 2006.

**Dear student,**

Bachelor of Management Certificate in English Final Examination -2008

The above examination will be held on 17th and 18 th of November 2008 at Kandy center. Please find enclosed your admission form, time table, examination rules and registration for the above examination. Those, who have renewed their registration for the academic year 2007 as resist candidates are also eligible to sit this examination.

You will not be admitted to the examination hall, unless you produce the student record book issued by the college. If you have already lost or misplaced your student record book, you should obtain a duplicate from the college Assistant Registrar, Student Affairs Division of the college before the commencement of the examination. Your result will be issued only on the payment of full course fees.

**Mr.MThurairajah.**
**Senior Assistant Registrar**
**Examination**

1. What is the examination mentioned in the letter?
   -----------------------------------------------------------------
2. When is the exam?
   -----------------------------------------------------------------
3. Who is the senior assistant registrar fo this college?
   -----------------------------------------------------------------
4. How can they get their duplicate record book?
   -----------------------------------------------------------------
5. What should they do to get their resuls of the exam?
   -----------------------------------------------------------------

**Test 15**

Fill in the blanks with the correct word.

1) who 2) which 3) because 4) as 5) when

1. Raman (1) -------------------- is a doctor will come tomorrow.
2. Mrs. Kokila did not like Bandar's hair (2) --------- It was black and straight.
3. Mr. Navakanth owned the 'expresss mill' (3) ------------ is at Nallur.

4. (4) ---------------- Ravi goes to school I look after the baby.
5. Tom and Mathu did not like their anuts (5) ---------------- they were always critical.
6. Mrs. Padma did not show her love for David (6) -------------- he was Untidy and mischievous.

**Test 16**


Choose the suitable prepositions.

On, over, beside, of, near, at, by, with, under

1. I get up (1) -------------------- 6.00 am
2. We go to school (2) -------------------- bus.
3. I am fond (3) -------------------- reading stories
4. I go to school (4) -------------------- my brother
5. The book is (5) -------------------- the table.
6. Kamal is a student (6) -------------------- Millennium Maha Vidyalaya.
7. The Aeroplane flew (7) -------------------- the island.
8. Our temple is (8) -------------------- the river.
9. The bank is (9) -------------------- the post office.
10. The thief is (10) -------------------- arrest.

**Test 17**

After studying this picture, underline the correct word.



This picture shows Ranjini's (family, friends, neighbours) in the environment. Her (1) (son, dog, puppy) is playing with the (2) (toy, cat, dog) near the well. At the same time her (3) (cat, daughter, puppy) is plucking (4) (flowers, free, plant) for her temple. There are two (5) (birds, animals, sun) in the sky. Thery are (6) (standing, flying , falling) very happily. Rajani is (7) (playing, drawing, drinking) water from the well. The sun is shining between the (8) (clouds, birds, well).

**Test 18**

**Write full answers for the following questions.**

1. What is your school's name?
-----------------------------------------------------
2. What is the type of your school?
-----------------------------------------------------
3. In which grade are you studying?
-----------------------------------------------------
4. Who is your principal?
-----------------------------------------------------
5. How many teachers are there?
-----------------------------------------------------
6. Is there a library in your school?
-----------------------------------------------------
7. Does your school have big buildings?
-----------------------------------------------------
8. Are you proud to study in your school?
-----------------------------------------------------
9. What special things are there in your school?
-----------------------------------------------------
10. What are you going to do in your future?
-----------------------------------------------------

**Test 19**

Complete the following telephone conversation by selecting the most suitable word and writing it in the blank space.

Priya :- Hello! (1) --------- (it, is, are) it Dhurka book depot?

Salesman :- Yes, (2) --------- (whose, who, whom) is speaking?

Priya :- I (3) ----------------- (am, is, were) a grade 10 student.

Salesman :- What (4) ----------------- (are, do, does) you want?

Priya :- I want toimrove (5) ----------------- (all, my, your) English knowledge, What (6) ----------------- (should, can, could) I do?

Selesman :- Very good, you can improve your English Knowledge (7) --------------- (on, with, through) the help of the model question. Papers without any (8) --------------- (help, support, friensds)

Priya :- Wow! Is (9) ------------(we, it, there) true?

Selesman :- sure,

Priy :- Where can I (10) -------------- (look, buy, play) these model papers?

Selesman :- You can buy then in all the book shops in Jaffna.

Priya :- Ok thanks.

**Test 20**

**Fill in the blanks with the correct form of verbs. First one is done.**

1. The flowers have fallen (fall) by the wind.
2. The tree was (1) ---------------------- (cut) by the man.
3. The home work is (2) ---------------------- (do) by me.
4. The prisoner is (3) ---------------------- (meet) by the Minister.
5. The pencils were (4) ---------------------- (keep) by some one in the box.
6. The window is (5) ---------------------- (break) by the thief.
7. The sum can (6) ---------------------- (do) by me.
8. He was (7) ---------------------- (praise) by our cycle
9. Raman was (8) ---------------------- (take) by us to hospital
10. This subject will (9) ---------------------- (learn) by students.

**Test 21**

**Write a paragraph about one of the following (Use about 50 words)**

1. My old bicycle.
2. Teachers' day in our school.
3. Elders' day

-----------------------------------------------------
-----------------------------------------------------
-----------------------------------------------------

# Answer

**Test - 10**

Marital status
Sex
Date of birth
Qulification
Nationality
Age
Occupation
Hobbies
Rligion
address

**Test - 11**

Clothes
Flowers
Farming
Jewels
A mine
Sale in a pack
Craft a fine art
Vessels
Medicines
Tea Leaves
Loom
Fish

**Test - 13**

1. Florence Nightingale
2. in a wealthy Victorian family in England
3. She didn't like to be dressed up in fine clothes, taken in carriages
4. because took up nursing
5. She helped them to get well.
6. lady with a lamp

**Test - 14**

1. from
2. member
3. that's
4. prize
5. first place
6. competition
7. going to
8. forget
9. according
10. touch

**Test - 15**

1. Vachelor of management certificate in English final exam
2. 17, 18 th November 2008
3. Mr.M.Thurairajah
4. From the senior assistant register, student affairs.

**Test - 16**

1. by/at
2. by
3.of
4.with
5.on
6.of
7.over
8.near
9.near / beside
10.under

**Test - 17**

. son
2. Dog
3.Daughter
4.Flowers
5.Birds
6.Flying
7.Drawing
8.Clouds

**Test - 18**

1. My school's name is M/ Hindu College
2. The type of my school is 1 AB
3.I'm studying in grade 11
4. My principal is Mr.S.Nadarajah
5.There are 50 teachers
6. Yes, there is a big library
7.Yes, my school has big building
8. Yes, I'm proud to study there
9. There are beautiful garden in our school
10. I want to be a doctor

**Test -19**

1. is
2. who
3. am
4. do
5. my
6. can
7. through
8. help
9. it
10. buy

**Test - 20**

2.cut
3.done
4.met
5.kept
6.broken
7.be done
8.praised
9.taken
10.be learnt

# தொண்டமான் நகருக்கு வீட்டுத்திட்டம்

## முதற்கட்டமாக 117 பயனாளிகள் தெரிவு

(கிளிநொச்சி)


கிளிநொச்சி மாவட்டத்தின் தொண்டமான் நகர் கிராமத்தில் 117 குடும்பங்கள் இந்திய வீட்டுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள நிலையில் 31 குடும்பங்களுக்கு முதற்கட்ட கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக கிராம மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட தாம் மீள்குடியேறி பல வருடங்கள் கழிந் துள்ள நிலையில் தமக்கு வீட்டுத் திட்ட வசதிகள் வழங்கப்படாது தாம் குடிசைகளிலும் தகரக் கொட்டகைகளிலும் வாழ்ந்து வந்ததாகவும் தற்போது வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளமையால் பெரும் நன்மை அடைந்துள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போது இக்கிராமத்தில் 117 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் முதற்கட்டமாக 31 குடும்பங்களுக்கு 50 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் அத்திவாரம் இடும் பணிகளை பயனாளிகள் மேற்கொண்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தெரிவு செய்யப்பட்ட ஏனைய குடும்பங்களுக்கும் படிப்படியாக கொடுப்பனவுகள் வழங்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (70)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்



அரியாலை தென்கிழக்கு மணியம் தோட்டம் முன்பள்ளி பாலர் பாடசாலையில் கல்வி பயிலும், வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை நல்லூர் பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும் பிரதேச அமைப்பாளருமான அம்பலம் இரவீந்திர தாசன் நேற்று முன்தினம் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர் மா.இந்துமதி, மாதர்சங்க தலைவி திருமதி.செ.சச்சிதானந்த தேவி, பெற்றோர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்

## பரிசளிப்பு விழா

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயம் நடத்தும் சைவசமய பரிசில் நாள் நிகழ்வு இன்று பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சைவசமய ஆசிரிய ஆலோசகர் செல்வி.இ.இராமலிங்கம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதி அரியரத்தினம், சிறப்புவிருந்தினர்களாக தென்மராட்சி கல்விவலய முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதன் ஓய்வுநிலை அதிபர்களான த.கந்தையா திருமதி சா.நகுலேஸ்வரன் சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ல.முகுந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (11)

## செலான் வங்கிக் கிளையினால் சேமிப்பை ஊக்குவிக்க சிறுவர் சந்தை

(யாழ்ப்பாணம்)

செலான் வங்கியின் சாவகச்சேரிக் கிளையினரால் தரம் ஒன்று மற்றும் இரண்டு மாணவர்களை சேமிப்பிலும், கல்வியுடன சுய தொழிலிலும் நாட்டம் ஏற்படும் வகையிலான சிறுவர் சந்தையை தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் நடாத்தவுள்ளனர்.

இதன்படி 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலையில் மு.ப 10 மணி தொடக்கம் 12 மணி வரையும், 12 ஆம் திகதி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் மு.ப.10.30 மணி தொடக்கம் 11.30 மணி வரையும் 13 ஆம் திகதி மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் மு.ப 11 மணிவரையில் இருந்து 12 மணிவரையும், 14 ஆம் திகதி வெள்ளி சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் மு.ப 10-11 மணி வரையும் நடைபெறவுள்ளது.

இச் சந்தையில் சேமிப்பில் சிறுவர்களை ஊக்குவிக்கும் முகமாக வீட்டில் பயிரிடப்பட்டு பெறப்பட்ட காய்கறி பழவகைகள், வீட்டில் தயாரித்த சிற்றுண்டி வகைகள் மற்றும் கைவினைப் பொருட்கள் எதுவாக இருப்பினும் அச்சிறுவர் சந்தையில் விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணத்தினை செலான் வங்கியில் அவர்களது சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டும் எனத் தெரியவித்துள்ளனர்.

விபரங்களுக்கு செலான் வங்கியின் சாவகச்சேரி கிளையுடன் 021 2270525, 0526 என்ற தொலைபேசியூடாகவோ நேரிலோ தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (11)



சாவகச்சேரி நகர் ஸ்ரீ பழனி கூட்டுறவுச் சங்க 22 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் புதிதாக தெரிவுசெய்யப்பட்ட நிர்வாக சபை உறுப்பினர்களைக் காணலாம். (11)

## இன்னமும் எழுவேன்...!



கசப்பான
திரிக்கப்பட்ட பொய்களைக்
கொண்டு
என்னை வரலாற்றில் எழுது
சகதியில் என்னைப் போட்டு
மிதி
ஆயினும் நான் எழுவேன்,
புழுதிபோல!

என் முரட்டுப் பேச்சால்
கலவரமடைகிறாயா?
ஏன் இந்த வாட்டம்?
ஏதோ என் வரவேற்பறையில்
எண்ணெய்க் கிணறுகள்
பொங்குவது போல்
இன்னமும் நான் எழுவேன்.

சந்திரனைப் போல
சூரியனைப் போல
கடலலை பெருகும் நிச்சயம்
போல
நம்பிக்கை உயர எழுவது
போல
இன்னமும் நான் எழுவேன்.

தலைகுனிந்து விழிகள்
தாழ்ந்து
கண்ணீர்த் துளிகள்
சொரிவது போல
தோள்கள் சரிந்து
ஆத்மாவின் அழுகையால்
வலுவிழந்து
நான் உடைவதைப் பார்க்க
விரும்பினாயா?
என் ஆணவம் உன்னை
அவமதிக்கிறதா?
ஏதோ என் அடிவளவில்
தங்கச் சுரங்கங்கள்
இருப்பது போல்
நான் சிரிப்பதைப்
பாரதூரமாகக் கருதாதே!

சொற்களால்
நீ என்னைச் சுடலாம்
கண்களால்
என்னை வெட்டி
வீழ்த்தலாம்
குரோதத்தால்
என்னைக் கொல்லலாம்
ஆயினும் நான் எழுவேன்
காற்றைப் போல!

என் பால்மை உன்னைக்
கலவரப்
படுத்துகிறதா?
ஏதோ என் தொடைகளின்
சந்திப்பில்
வைரங்களைச் சுமப்பவள்
போல
நான் நடனமாடுவது கண்டு
அதிசயப் படுகிறாயா?

வரலாற்றின் அவமானக்
குடிசைகளிலிருந்து
நான் எழுவேன்.
வலியின் வேர்பாய்ச்சிய
கடந்த
காலத்திலிருந்து நான்
எழுவேன்.

அலையச் சுமந்தபடி
பொங்கித் தாவும்
அகன்ற கருங்கடல் நான்!
திகிலும் அச்சமும் தரும்
இரவுகளை
விட்டுவிட்டு
தெளிந்த விடியலுக்குள்
நான் எழுவேன்
என் மூதாதையர் தந்த
வெகுமதிகளை ஏந்தி வரும்
நானே
அடிமையின் கனவும்
நம்பிக்கையும்!

நான் எழுவேன்
நான் எழுவேன்
நான் எழுவேன்

*ஆங்கில மூலம் : மாயா அஞ்ஜெலூ*
*தமிழில : சோ.ப*

# மகளிர் தின நிகழ்வுகள்

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சர்வதேச மகளிர் தின நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி நகர் புவேந்தன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் திருமதி கீர்த்திநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர்செல்வி ரஞ்சனா நவரட்ணம், தென்மராட்சி பிரதேச செயலக திட்டப்பணிப்பாளர் திருமதி இ.இரகுநாதன், தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.ரவிகரன் சாவகச்சேரி நகர் கிராம அலுவலர் வி.சிவசரவணநாதன் ஓய்வுநிலை கிராமஅலுவலர் வை.இராஜரட்ணம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து பரிசில் வழங்கல், கௌரவிப்பு, கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன.(11)

* * * *

(யாழ்ப்பாணம்)

பெண்கள் விழிப்புணர்வு அரங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்.பொது நூல் நிலைய உணவக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களும், தீர்வுகளும், சுயாதீன பெண்கள் அமைப்பின் தேவை குறித்து கருத்துரைகளும் இடம்பெறவுள்ளன.

* * * *

கைதடி தென்மேற்கு சரஸ்வதி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினவிழா நாளை ஞாயிறறுக்கிழமை மாலை 6 மணிக்கு கைதடி மேற்கு சரஸ்வதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

திருமதி மகேந்திரம் நிர்மலா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு யாழ். மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோ கத்தர் செல்வி நவரட்ணம் உதயனி பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலகத்தின் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தி யோகத்தர் திருமதி புவிகரன் றஜனி, சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் திருமதி சத்தியேஸ்வரன் வரதீஸ்வரி, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுதாகர் கனகபூரணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் காலை 9.00 மணிக்கு மாதர்சங்க அங்கத்தவர்களின் விளையாட்டு நிகழ்வுகளும் மாலை நிகழ்வுகளாக கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (51)

### - முன்னாள் ஜனாதிபதியை கைது செய்ய -

# இன்டர்போலிடம் உதவிகோரும் உக்ரேனின் இடைக்கால அரசு

(கீவ்)

முன்னாள் அதிபர் விக்டர் யனுகோவிச்சை கைது செய்து தங்களிடம் ஒப்படைக்கும்படி சர்வதேச பொலிஸ் இன்டர்போலுக்கு உக்ரேன் நாட்டின் இடைக்கால அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐரோப்பிய யூனியனில் உக்ரேன் நாட்டை இணைக்க அதிபர் விக்டர் யனுகோவிச் மறுத்ததால் அவரை பதவி விலகக் கோரி நடந்த மக்களின் ஆர்ப்பாட்டங்கள் காவல்துறையின் அடக்குமுறையால் வன்முறை சம்பவங்களாக மாறியது.

இதனையடுத்து, தலைநகர் கீவ்வில் உள்ள சுதந்திர சதுக்கத்தை கைப்பற்ற இலட்சக்கணக்கான மக்கள் திரண்டு சென்றனர். அவர்களை தடுக்க முயன்ற காவல்துறையினருக்கும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் கடுமையான மோதல் ஏற்பட்டது. அவர்களை நோக்கி காவல்துறையினர் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசியும், துபபாக்கியால் சுட்டும் கலைந்து செல்ல வைக்க முயற்சித்தனர். காவலர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு எதிராக ஆர்ப்பாட்டக்காரர்கள் காவல்துறையினர் மீது பெறரோல் குண்டுகளை வீசினர்.

இதில் நகரில் உள்ள பல கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இந்த தாக்குதலில் இரு தரப்பிலும் நூற்றுக்கும் அதிகமானோர் பலியாகினர். போராட்டக்காரர்களுடன் சமாதானமாக போக விரும்புவதாக கூறிய அதிபர் விக்டர் யனுகோவிச் எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த ஒரு குழுவை அமைத்தார்.

அந்தக்குழுவின் ஆலோசனையின்படி, நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியடைந்த விக்டர் யனுகோவிச்சை அதிபர் பதவியில் இருந்து நீக்குவதாக நாடாளுமன்றம் அறிவித்தது. வரும் மே மாதம் 25ஆம் திகதி புதிய அதிபர் பதவிக்கான தேர்தல் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில், அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி, போராட்டக்காரர்களை கொன்று குவித்த குற்றச்சாட்டுக்காக அவரை கைது செய்யும்படி அந்த வேண்டுகோளில் உக்ரேன் அரசு கேட்டுக் கொண்டுள்ளது.



இந்த வேண்டுகோள் ஏற்கத்தக்கது தானா? என்பதை இன்டர்போலின் சட்டப்பிரிவு அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர். அவரைக் கைது செய்யலாம் என முடிவு செய்யப்பட்டால் உலக நாடுகளில் உள்ள இன்டர்போல் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்படும். எந்த நாட்டில் பதுங்கி இருந்தாலும் விக்டர் யனுகோவிச் கைது செய்யப்படுவார் எனத் தெரிகிறது.

உலகச் செய்திகள்

# தொடர் குண்டுவெடிப்பு பாக்தாத்தில் 37 பேர் பலி

ஈராக் தலைநகர் பாக்தாத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நிகழ்ந்த குண்டு வெடிப்புகளில் 37 பேர் பலியானதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

பக்தாத்தின் தென்மேற்கே உள்ள அமில் பகுதியில் கார் குண்டு வெடித்து 7 பேரும், சதிர் பகுதியில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் 4 பேரும், வர்த்தக வீதியில் 3 பேரும், ஹில்லாவில் நடைபெற்ற 2 கார் குண்டு வெடிப்புகளில் 9 பேரும், மிஷாடாவில் 5 பேரும் என மொத்தம் 37 பேர் பலியானதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு இதுவரை எந்த தீவிரவாத இயக்கமும் பொறுப்பு ஏற்கவில்லை. அல்-காய்தா ஆதரவு தீவிரவாதிகள் இந்த குண்டுவெடிப்பை நிகழ்த்தியிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# பா.ஜ.க. கூட்டணியில் தே.மு.தி.க. இணைவு



பா.ஜ.க கூட்டணியில் தேமுதிக இணைவதற்கு முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

பா.ஜ.க அணியில் இணைய மதி.மு.க, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி, ஐ.ஜே.கே, புதிய நீதிக கட்சி ஆகிய கட்சிகள் ஆதரவு தெரிவித்திருந்தன.

இந்த கட்சிகளுடன் கூட்டணி பேச்சை பா.ஜ.க முடித்துள்ளது. தொகுதி பங்கீடு மட்டும் எஞ்சியுள்ளது. பலமான கூட்டணியை உருவாக்கும் வகையில் தே.மு.தி.க, பாமகவுடன் பாஜக பல்வேறு கட்டமாக பேச்சுவார்த்தையை நடத்தி வந்தது.

தமிழக பா.ஜ.க பொறுப்பாளரும், பொதுச்செயலாளருமான முரளிதர ராவ், மாநிலத் தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த், பா.ம.க நிறுவன தலைவர் ராமதாஸ், இளைஞரணி தலைவர் அன்புமணி ராமதாஸ் ஆகியோரை சந்தித்து பேச்சு நடத்தினர். இதில் உடன்பாடு எட்டப்படவில்லை. கூட்டணியில் இடம் பெற தே.மு.தி.க 20 சீட், பாமக 14 சீட்களை கே[illegible]தாக கூறப்பட்டது. மேலும் 2 கட்சிகளும் ஒரு சில குறிப்பிட்ட தொகுதிகளை கேட்டன. இந்த தொகுதிகளை 2 கட்சிகளும் விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று பிடிவாதமாக இருந்தன.

இந்நிலையில் பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்து போட்டியிடுவதாக தே.மு.தி.க நேற்று முன்தினம் அதிகாரபூர்வமாக அறிவிப்பு வெளியிட்டது. அதில், தே.மு.தி.க ஏப்ரல் 24ஆம் திகதி நடைபெறவுள்ள 16ஆவது நாடாளுமன்ற தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டியிட முடிவு செய்துள்ளது என்றும் பா.ஜ.க வுடன் கூட்டணி குறித்த பேச்சுவார்த்தையை தொடங்கியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தி.மு.க வுடன் கூட்டணிசேர கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆராய்வு



அ.தி.மு.க அணியிலிருந்து விலகுவதாக அதிகாரபூர்வமாக கம்யூனிஸ்ட் கட்சிகள் அறிவித்துள்ள நிலையில், தி.மு. க. கம்யூனிஸ்ட் கட்சிகள் இடையே கூட்டணி உருவாவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், இரு கட்சித் தலைவர்களும் மார்க்சிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை சந்தித்துப் பேசினர். அக்கூட்டத்துக்கு பிறகு மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி.இராமகிருஷ்ணன் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண டியன் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ், பா.ஜ.க கூட்டணியை முறியடிக்க அ.தி.மு.க.வுடன் போட்டியிட முடிவு செய்தோம். ஆனால் அ.தி.மு.க.வுடன் தொகுதி பங்கீடு குறித்து நடைபெற்ற பலகட்ட பேச்சு வார்த்தைகளில் உடன்பாடு ஏற்படவில்லை. அ.தி.மு.க 40 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவித்து தேர்தல் பிரசாரத்தையும் தனித்தே தொடங்கிவிட்டது. இந்நிலையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒருங்கிணைந்து மக்களவைத் தேர்தலை எதிர்கொள்வது என முடிவு செய்துள்ளோம் என்று கூறியுள்ளனர்.

இரு கட்சி நிர்வாகிகளும் சந்தித்தபோது, தி.மு.க.வுடன் கூட்டணி சேருவது பற்றி மார்க்சிஸ்ட் கட்சி தரப்பில் பெரும் தயக்கத்தை வெளிப்படுத்தியதாகக் கூறப்படுகிறது. இருந்த போதிலும் இறுதியான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.


# தூத்துக்குடியில் லொறிவிபத்து 3பேர் பலி; 5 இலங்கையர் காயம்

தூத்துக்குடி மாவட்டம் கோவில பட்டி அருகே உள்ள ஆவல்நத்தம் விலக்கு பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் ஐந்து இலங்கை அகதிகள் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருச்சி மாவட்டம் கொட்டப்பத்து இலங்கை அகதிகள் முகாமைச்சேர்ந்த அகதிகள் 10 பேர் நேற்றுமுன்தினம் நாகர்கோவிலில் ஒரு தனியார் நிறுவனத்திற்கு வேலைக்காகச் சென்று திரும்பிக் கொண்டிருந்த வேளை நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இலங்கை அகதிகளை ஏற்றிச் சென்ற லொறி வீதி ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது பின்னால் வந்த மற்றுமொரு லொறி அதில் மோதி இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் திருச்சி அகதிகள் முகாமை சேர்ந்த ஜெயரூபன் (வயது 36), மதியழகன்(50), ரஜினிகாந்த் (36), ரமேஷ் (34), ஜீவானந்தம் (45) ஆகிய 5 பேரும பட்டு



காயமடைந்து அம்பியுலன்ஸ் உதவியுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இரு லொறிகள் மோதி விபத்து ஏற்பட்டு சிறிது நேரத்தில் மற்றுமொரு லொறி பின்னால் வந்து விபத்துக்குள்ளான லொறி மீது மோதி ஏற்பட்ட விபத்தில் வள்ளியூர் அருகே உள்ள செட்டிகுளத்தைச் சேர்ந்த வாழைக்காய வியாபாரி கோபால் (50), சோலான விளையைச்சேர்ந்த லொரி சாரதி குமரேசன்(49),நடத்துநர் பெருமாள் (வயது-51) ஆகிய 3 பேரும் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளனர்.

# கடவுளை நெருங்குவதற்காக புற்களை உண்ணும் மக்கள்

## தென்னாபிரிக்காவில் அதிசயம்



கடவுளை நெருங்குவதற்காக தென்னாப்பிரிக்கா மக்கள் புற்களை உண்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

தென்னாபிரிக்க நாட்டில் காரன்குவா பகுதியில் வசிக்கும் மக்களிடம் லெசிகோ டேனியல் என்ற மததலைவர், பூமியில் விளைவதை உண்பதன் வழியாக நாம் கடவுளுக்கு அருகில் நெருங்கிச் செல்வோம் என்றும் அது மதத்தின் பக்தியை வெளிப்படுத்தும் அடையாளமாக இருக்கும் எனவும் கூறியுள்ளார்.அதனைக் கேட்ட அங்கு வசிக்கும் மக்கள் ஆடுகளைப் போன்று மண்டியிட்டு கொண்டு புற்களை உண்ண ஆரம்பித்துவிட்டனர். அவர்களில் சிலர், தங்களது உடல் வியாதிகளான தொண்டை கரகரப்பு மற்றும் ஸ்டிரோக் போன்றவை குணமாகியுள்ளன என்றும் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தகவல் பல்வேறு சமூக வலைதளங்களிலும் வெளியிடப்பட்டுள்ளது.

# நைஜீரியாவில் வன்முறை 20 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

(அபுஜா)

நைஜீரியாவில் போஹோ ஹரம் தீவிரவாதிகள் அரசுக்கு எதிராக வன்முறை தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிறனர். மேற்கத்திய கலாசாரத்துக்கு எதிராக தாக்குதல் நடத்துகின்றனர். சமீபத்தில் போர்னோ மாகாணத்தில் ஒரு பள்ளி விடுதியில் புகுந்து 43 மாணவர்களை சுட்டுக்கொன்று குவித்தனர்.

மேலும், அப்பாவிப்பொது மக்களை தினமும் கொன்று குவித்து வருகின்றனர். எனவே, இவர்கள் அட்டூழியத்தை தடுக்க நைஜீரிய இராணுவம் நேற்றுமுன்தினம் அதிரடி நடவடிக்கை மேற்கொண்டது.

அதமாவா, போர்னோ, யோப் ஆகிய மாகாணங்களில் பள்ளி மற்றும் கல்லூரிகள் மூடப்பட்டன. தீவிரவாதிகள் பதுங்கியிருக்கும் இடங்களை கண்டறிந்து துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

தீவிரவாதிகளும் பதிலுக்கு சுட்டனர். இந்த துப்பாக்கிச் சண்டையில் 20 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். பலர் காயம் அடைந்தனர். இத்தகவலை இராணுவ செய்தி தொடர்பாளர் கிறிஸ் ஒலு கோலேடு தெரிவித்தார்.

இதற்கிடையே கடந்த 5 நாட்களில் சுமார் 100 பேரை தீவிரவாதிகள் கொன்றுள்ளனர். இந்த ஆண்டு போர்னோ மாகாணத்தில் மட்டும் 500 பேர் பலியாகியுள்ளனர்.

# செஞ்சிலுவை வளாகத்தில் எரிபொருள் நிரப்பு நிலையம்

## சூட்சுமம் என்ன?

(யாழ்ப்பாணம்)

சுண்டிக்குளிப் பகுதியில் உள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க வளாகத்தில் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைவதை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அதிருப்திக் குழுவினரே எதிர்ப்பதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையின் தலைவர் பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

செஞ்சிலுவைச் சங்கத்தினால் சுண்டிக்குளியில் அமைந்துள்ள வளாகத்தில் இருந்த அதன் பழைய கட்டடம் அகற்றப்பட்டு அதில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்த நிலையில், அதனை அமைப்பதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதாக வெளிவந்த செய்திகள் குறித்தே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

மேலும் அப்பகுதியில் உள்ள ஒரு சில செஞ்சிலுவைச் சங்கத்தின் அதிருப்தியாளர்கள் குழுவினரே இவ்வாறு எதிர்த்துள்ளனர். இதன் காரணமாக இந்த நிர்மாணப் பணிகளுக்கு யாழ். மாநகர சபையினால் தடை போடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர் சகல விதமான அனுமதியும் பெறப்பட்டதன் பின்னரே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கொள்கைப்படி வியாபார நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்து அதன் மூலமாக வரும் வருமானத்தை பொது மக்களுக்குச் சேவையாற்ற அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தென்பகுதியிலும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் செயற்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் இந்தியன் ஒயில் கூட்டுத்தாபனத்தினால் 500 இலட்சம் ரூபா செலவில் எமக்கு எரிபொருள் நிரப்பு நிலையத்தை அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே தான் சுண்டிக்குளியில் அமைந்துள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க வளாகத்தில் அதன் 85 வருட பழமை வாய்ந்த கட்டடத்தை அகற்றிவிட்டு எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே இத்திட்டம் குறித்து தெரியப்படுத்தி அனுமதியையும் பெற்றிருக்கிறோம். இந்தவிடயம் இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிருப்தியாளர்கள் குழுவில் உள்ள சிலருக்கும் தெரியும்.

இருந்தும் அங்கு சில பொது மக்களையும் இணைத்து இந்த அதிருப்தியாளர்கள் குழு எரிபொருள் நிரப்பு நிலையத்தை அமைப்பதனைத் தடுத்திட நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் தமது தரப்பு நியாயங்களை நேற்று முன்தினம் யாழ்.மாநகர முதல் வரிடம் நேரில் தெரிவித்ததாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (பா)

# கணக்காய்வாளர்களுக்கு விசேட செயலமர்வு



வடமாகாண அரச திணைக்கள சிரேஷ்ட கணக்காய்வாளர்களுக்கு கணக்கீடு நியமனம் தொடர்பான செயலமர்வு நேற்று நடைபெற்றது. யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரையும் இருநாள் பயிற்சி பட்டறை நேற்று முதல் நடைபெற்று வருகின்றது.

நேற்றைய பயிற்சிப் பட்டறையில், இலங்கை கணக்கீட்டு நியமத்தில் உள்ள சொத்துக்களும், உபகரணங்களும், காசு பாய்ச்சல் கூற்று, பொது நாட்குறிப்பேடு, நாளேடுகள், நாளேடுகளை கட்டுப்படுத்தல் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமத்தின் ஆலோசக வல்லுனர்களால் விளக்கமளிக்கப்படுகின்றன.

இன்று நடைபெறவுள்ள இரண்டாம் நாள் செயலமர்வில், கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு எதிர்பார்க்கைகளின் மாற்றங்களும் தவறுகளும், நிதிக்கூற்றுக்கள் பற்றியும், பற்றுக்கிரயம் பற்றியும், கணக்கீடு சமர்ப்பிக்கப்படும் திகதி பற்றியும், சொத்துக்கள், பொறுப்புக்கள் நிலைகள் பற்றியும் விளக்கமளிக்கவுள்ளனர்.

இச்செயலமர்வில், வடமாகாண பிரதம செயலாளர் ரமேஷ் விஜயலக்சுமி மற்றும் வடமாகாண சபை டி.சி.எஸ். முதலீட்டு கணக்காளர் ஆர்.பத்மநாதன், வடமாகாண சபையின் உள்ளக கணக்காளர் என்.இராசநாயகம் உட்பட பலர் கலந்து கொண்டனா. (25)

## இனங்களுக்கிடையில்...

கொள்ளப்பட்ட முன்னேற்ற நடவடிக்கைகளை பிரதிபலிப்பதாக இப்பிரேரணை விளங்குகிறது. ஐக்கிய அமெரிக்க செனட்டர்கள் இலங்கை சம்பந்தமாக மேற்கொண்ட இந்தச் சார்புப் பிரேரணையானது, இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு மானசீக உந்துதலாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவியதும் மற்றும் அது மேற்கொண்டு வரும் பலதரப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் பிரேரணையில் சுட்டிக்காட்டியுள்ளமை பாராட்டுக்குரியது என அவர் தெரிவித்தார் .

இந்தப் பிரேரணையானது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. அமெரிக்க - இலங்கை உறவை மேலும் இப்பிரேரணை வலுப்படுத்தும் என்பது எனது நம்பிக்கை. இலங்கையைப் பற்றிய உண்மையான தகவல்களை தமது பிரதிநிதிகளுக்கு வழங்கியதற்கு அமெரிக்காவிலுள்ள இலங்கையர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளதாகவும், அவர்களது விடாமுயற்சியின் பிரதிபலனாகவே செனட் பிரேரணை 364 அறிமுகம் செய்யப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவிலுள்ள அரசியல் பிரதிநிதிகளுக்கு தொடர்ந்தும் தற்போதைய அபிவிருத்திகள் பற்றி விளக்கமளிக்கும்படியும் அவர்களை இலங்கைக்கு வந்து நேரடியாக இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை பார்வையிடும்படி கோரும் வண்ணம் அமெரிக்காவிலுள்ள இலங்கையர்களை அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மூதூர் படுகொலை...

உரிமை பாதுகாவலர்களுக்கு எதிரான அடக்கு முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என இலங்கை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

7 ஆண்டுகளுக்கு முன்னர் மூதூரில் இடம்பெற்ற 17 தொழிலாளர்களின் கொலைச் சம்பவம் குறித்த தகவல்களை இலங்கை அரசாங்கம் வெளிச்சமிட்டுக் காட்ட வேண்டும் எனப் பிரான்ஸ் பிரதிநிதி குறிப்பிட்டுள்ளார்.

மூதூரில் 2006 ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்ட தமது பணியாளர்களின் கொலை தொடர்பில் பிரான்ஸ் அரச சார்பற்ற நிறுவனம் கடந்த வருடம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

2006 ஆகஸ்ட் 4 ஆம் திகதி இடம்பெற்ற இந்தக் கொலைச் சம்பவத்துடன் இராணுவத்தினர், கடற்படையினர் மற்றும் பொலிஸாருக்கு தொடர்பு இருப்பதற்கான ஆதாரங்கள் இருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## சிவில்...

விரிவுபடுத்தவும், அவற்றின் குறை, நிறைகள் தொடர்பில் செயற்படுத்தப்பட்டு திட்டம் ஒன்றின்படி இச்செயலமர்வு வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இடம்பெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் செயற்திட்டம் மற்றும் தடுக்கும் வழிமுறைகள் தொடர்பில் சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு விளக்கப்பட்டதுடன், இக்கலந்துரையாடல் நேற்று பிற்பகல் வரை இடம்பெற்றது. (இ)

## மனித உரிமை...

வடக்கு மாகாணத்திலிருந்து ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் த.கனகராஜாவும், கிழக்கு மாகாணத்திலிருந்து கல்முனை பிராந்திய இணைப்பாளர் இஸ்ஸதீன் லத்தீப்பும் கலந்து கொள்கின்றனர். ஏனைய எண்மரும் தலைமையகம் சார்பில் கலந்து கொள்ளும் அதிகாரிகளாவர்.

# வடமராட்சி கிழக்கில் முன்னேற்றம் தொடர்பாக ஆராய்வு





(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு பிரதேச அபிவிருத்தி முன்னேற்றம் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் தலைமையில் நேற்று இடம் பெற்றது இந்நிகழ்வின் போது விவசாயத்திணைக்கள அதிகாரியினால் அரசசார்பற்ற நிறுவனங்கள் தன்னிச்சையாக செயற்படுவதனால் மக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் மற்றும் திட்டம் பின்னடைவதற்கான காரணங்களினைச் சுட்டிக்காட்டியதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) அரசசார்பற்ற நிறுவனங்களின் வேலைத்திட்டங்களின் போது உரிய திணைக்களத்தின் ஆலோசனையினைப் பெறவேண்டுமெனத் தெரிவித்தார்.

தொடர்ந்து இடம்பெற்ற இக்கூட்டத்தொடரில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளான தடைசெய்யப்படும் தொழில் முறைமை போன்றவை முற்றாக நிறுத்தப்படவேண்டும் எனவும், வெளிமாவட்ட மீனவர்கள் தகாத தொழில் முறையினை பயன்படுத்த மீனவர் சங்கங்கள் இடமளிக்ககூடாது எனவும் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து மருதங்கேணி வைத்தியசாலையானது எதுவித அடிப்படைத்தேவைகளையும் பூர்த்தி செய்யாத நிலையிலும் ஊழியர்கள் வ்ழங்கப்படாத நிலையிலும் இயங்குவதாகவும் மக்களுக்கு சரியான வைத்திய சேவையினை வழங்க தேவையான வசதிகள் இன்மையினால் மருதங்கேணிப்பிரதேச மக்கள் வேறு பிரதேசத்திற்கு சென்று சிகிச்சை பெறவேண்டியுள்ளது எனவும் மருதங்கேணி வைத்திய அதிகாரி சுட்டிக்காட்டினார். தொடர்ந்து போக்குவரத்தில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மாணவர்களின் கல்வி போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

இதனையடுத்து பன்முகப்படுத் தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலமான தளபாடங்கள், தையல் இயந்திரங்கள் போன்றனவும் கையளிக்கப் பட்டன.

## புதிய நீதிபதி நேற்று பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக மொகமட் மக்கி நேற்று பதவி ஏற்றுக் கொண்டார்.

மன்னார் மேல் நீதிமன்ற ஆணையாளராக இருந்த மொகமட் மக்கி பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவருடன், யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கரும் இணைந்து செயற்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

# தெற்கில் தேர்தல் வன்செயல்; இதுவரை 538 முறைப்பாடுகள்

(கொழும்பு)

மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பான 538 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவிக்கின்றது. கொழும்பு மாவட்டத்தில் அதிகபட்சமாக 156 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக செயலகத்தின் முறைப்பாட்டுப் பிரிவு சுட்டிக்காட்டுகின்றது.

கம்பஹா மாவட்டத்தில் 55 முறைப்பாடுகளும், களுத்துறையில் 70 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிடுகின்றது. தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் அதிகபட்சமாக 85 தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

64 முறைப்பாடுகள் காலி மாவட்டத்திலும், அம்பாந்தோட்டையில் 59 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் செயலகம் கூறுகின்றது.

கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகள் தொடர்பிலேயே அதிக முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் 151 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவிக்கின்றது.

சட்டவிரோத சுவரொட்டிகள், மற்றும் பதாதைகளுடன் தொடர்புடைய 121 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அரச வாகனங்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பிலும் தேர்தல்கள் செயலகத்திற்கு 47 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

## மல்லாவியில் ஆர்ப்பாட்டம்



(முல்லைத்தீவு)

மல்லாவிப் பகுதியில் முப்பது வருடங்களாகப் புனரமைக்கப்படாத ஒரு முக்கிய வீதி புனரமைக்கப்பட்டு புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டுள்ள போதிலும், மல்லாவி நகர வர்த்தகர்களுக்கும் பொதுமக்களுக்கும் புதிய பிரச்சினைகளைத் தோற்றுவித்திருப்பதாகக் கூறி நேற்று அங்கு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

## "சமகால நோக்கில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ்"

(திருநெல்வேலி)

சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் நடாத்தும் 'சமகால நோக்கில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ்' என்ற தலைப்பிலான கருத்துரை இடம்பெறவுள்ளது.

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு முன்பாகவுள்ள செயற்திறன் அரங்க இயக்க மண்டபத்தில் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் சீலன் கதிர்காமர் கருத்துரை வழங்கவுள்ளார். இக்கருத்துரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும்.

## தேசிய அருங்கலைகள் பேரவையில் அபிவிருத்தி நோக்கிய ஆய்வு

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள தேசிய அருங்கலைகள் பேரவை வளாகத்திற்கு நேற்று முன்தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா களநிலை ஆய்வு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

மேற்படி வளாகத்தில் அமைக்கப்பட்டு வரும் கலைஞர்களுக்கான விடுதி மற்றும் அமைக்கப் படவுள்ள கட்டடத் தொகுதிகள் உட்பட பல்வேறு அடிப்படை வசதிகள் குறித்து அமைச்சர் இதன்போது ஆராய்ந்தார்.

இவ்விஜயத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவுடன் அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, சிரேஸ்ட துணைச் செயலாளர் புஷ்பா கருணாரட்ன, தேசிய அருங்கலைகள் பேரவையின் தலைவர் புத்தி கீர்த்தி சேன உட்பட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



## இலவசக் கற்கை நெறிகள்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), மரவேலை தொழில் நுட்பவியலாளர் (தளபாடம்), ஆகிய கற்கை நெறிகளை இலவசமாக ஆரம்பிக்கவுள்ளது. இவ்வனைத்துக் கற்கை நெறிகளும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

இக்கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், தொழிற் பயிற்சி அலுவலகம் 1 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல 12, கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணம். அல்லது காரைநகர் தொழிற்பயிற்சி நிலையம், வலந்தலை என்னும் இடங்களில் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## பாம்புக்கடிக்கு இலக்கான வயோதிபர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு முள்ளியவளையில் பாம்புக்கடிக்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வயோதிபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு முள்ளியவளையைச் சேர்ந்த பி.ஜெ. செல்வநாயகம் (வயது - 73) என்ற வயோதிபரே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த நான்காம் திகதி பாம்புக்கடிக்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் நேற்று கிசிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (பா)

## நன்னீர் மீன்பிடி அபிவிருத்தி; துரித நடவடிக்கைக்கு வரவேற்பு


மீள்குடியேற்றத்தின் பின்னர் இரணைமடு நன்னீர் மீன்பிடி தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரட்ன, ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் ஆகியோர் மேற்கொண்ட நடவடிக்கையே இன்று இரணைமடு நன்னீர் மீன்பிடித் துறையின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது என ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் இரணைமடு நன்னீர் பிடி அங்கத்தவர்களுக்கான கடற்றொழில் அமைச்சின் 20 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட ஓய்வு மண்டபத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இரணைமடு நன்னீர் மீன் பிடி மாத்திரமன்றி வடக்கு கடற்றொழிலாளர்களின் நலன்களுக்காக அமைச்சர் பல நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றார். குறிப்பாக தென்னிலங்கை மீனவர்கள் வடக்கு கடலில் மீன் பிடியில் ஈடுபடுகின்றமை தொடர்பில் அமைச்சர் மிகவும் உறுதியாக தென்னிலங்கை மீனவர்கள் வடக்கு கடலில் சென்று தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது தெரிவித்திருந்தார். அத்தோடு தென்னிந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பிலும் அவர் எங்கள் மீனவர்களின் நலன்களை முதன்மைப்படுத்தியே செயற்பட்டு வருகின்றார்.

அது மட்டுமன்றி தமிழ் மக்களின் பிரச்சினைக்கான அரசியல் தர்வு விடயங்களிலும் அவர் நியாயமாக தனது கருத்துக்களை தெரிவித்து வருகின்றவர் என அமைச்சருக்கு எங்கள் மக்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக் குறிப்பிட்ட அவர்

அதிக புரதம் கொண்ட நன்னீர் மீன் பாவனை எங்கள் சமூகத்தில் குறைவாகவே காணப்பட்டு வருகிறுது இது தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும் குறைந்த விலையில் அதிக புரதம் கொண்ட மீன் சந்தையில் கிடைக்கின்ற போதும் எங்கள் மக்கள் அதில் ஆர்வம் செலுத்துவது இல்லை இந்த நிலைமையினை மாற்ற வேண்டும் அப்போதுதான் நன்னீர் மீன்பிடி தொழிலாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் எனவும் தெரிவித்தார்.



கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியியல் வள திணைக்களத்தின் விரிவாக்கல் உத்தியோகத்தர் சலீபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கடற்றொழில் நீரியியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன, அமைச்சின் மேலதிக செயலாளர், தேசிய கடற்றொழில் நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஜெயந்த சந்திரசோம மற்றும் அதன் பணிப்பாளர் திருமதி புஸ்பானந்த, கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நிரியியல் வள திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர் இரவீந்திரன் கிளிநொச்சி மாவட்ட செயலக பிரதி திட்டப் பணிப்பாளர் கேதீஸ்வரன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உறுப்பினர் அன்ரன் அன்பழகன் இரணைமடு நன்னீர் மீன்பிடி சங்கத்தின் பிரதிநிதகள் அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## இளம்பெண் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

இணுவில் பகுதியிலிருந்து இளம் பெண் ஒருவரது சடலம் நேற்று முன்தினம் இரவு பொலிஸாரினால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி நுணாவிலைச் சேர்ந்த மகேந்திரம் கிபோணா (வயது - 17) என்ற இளம் பெண்ணின் சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

காதல் தொடர்பு காரணமாக ஒருவருடன் ஓடிச்சென்று இணுவில் பகுதியில் வசித்து வந்த நிலையிலேயே தூக்கு மாட்டி இறந்ததாகத் தெரிவிக்கப்படும் இந்த இளம்பெண்ணின் காதலனும் நஞ்சருந்திய நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த இளம்பெண் அவரது காதலனாலேயே கொலை செய்யப்பட்டிருப்பதாக பெண்ணின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (பா)

## ஆரம்பபிரிவு மாணவர்களின் கல்வியை மேம்படுத்தத் திட்டம்

(வலிகாமம்)

பல்வேறு செயற்றிட்டங்களின் மூலம் ஆரம்பபிரிவு மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ். சந்திரராசா தெரிவித்துள்ளார்.

இந்த கல்வி மேம்பாட்டுத்திட்டத்தின் படி ஒவ்வொரு மாதமும் மூன்றாவது புதன்கிழமைகளில் தரம் 3,4 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு விசேடமாகத் தயாரிக்கப்பட்ட செயற்திட்டத்தின் கீழ் வாசிப்புத்திறன், எழுத்து ஆகிய செயற்பாடுகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

இந்த மாதம் தொடக்கம் இந்தச் செயற்பாடு மேற்கொள்ளப்படவுள்ளதுடன், மாணவர்களின் அடைவு மட்டம் கருத்திற்கொள்ளப்பட்ட அவர்களின் கல்வித்தரத்தை அதிகரிக்கும் வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தத்திட்டதைப் கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகர்கள் நேரடியாக கண்காணிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### திருமதி சுப்பிரமணியம் சரஸ்வதி



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் சரஸ்வதி (06.02.2014) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தவில் வித்துவான் சுப்பிரம்ணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பக்கிரிசாமி - பூரணம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சண்முகம், மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், ராசரத்தினம் (கனடா), கோபாலரட்ம் (அமரர்), யோகலிங்கம் (கனடா), நடராஜாசுந்தரம் (கனடா), இரத்தினாம்பாள் (கனடா), தனலட்சுமி (மல்லாவி), உதயலட்சுமி (அமரர்), ஞானசுந்தரம் (கனடா), சற்குணராசா (பிராண்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சர்வஸ்வரி, கமலேஸ்வரி, நடராஜசுந்தரம் (கனடா), தில்லை, சுதாகரன் (கனடா), சுதர்சன் (கொழும்பு), ஜெயா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலம்சென்ற சிவதாஸ், காலம்சென்ற சிவகுமார், வனிதா, வதனி (கனடா), சித்திரா (கொ்ழும்பு), சண்முக (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் திங்கட்கிழமை 10.03.2014 அவரது இல்லத்தில் பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்று பூதவுடன் தகனக்கிரியைக்காக வழுக்கையா இந்த மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவன்கோயில் வீதி** **தகவல்**

**சித்தன்கேணி** (இ) **குடும்பத்தினர்**

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மார்ச் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.